
# ஸ்ரீ லங்கா

அரசாங்க சமாச்சாரப் பகுதியால் வெளியிடப்பட்டது

மலர்: 12 இதழ்: 2 ஜனவரி, 1960 விலை: சதம் 15



## அட்டைப் படம்



இலங்கை சிற்பக்கலையிலும் கட்டடக் கலையிலும் சிறந்து விளங்கியது போலவே, சித்திரக்கலையிலும் பேர் பெற்று விளங்கியது. அஜந்தா சித்திரங்களுக்கு அடுத்தபடியாக மதிக்கப்படும் சிகிரியாச் சித்திரங்கள் இலங்கையிலேயே காணப்படுகின்றன. பொலநறுவை, கண்டி, மகியங்கண, களனி முதலிய இடங்களில் சுவர்ச் சித்திரங்கள் காணப்படுகின்றன. களனியில் பண்டைக் காலச் சுவர்ச் சித்திரங்களைப் போன்ற அழகிய சித்திரங்கள் பிற்காலத்திலேயே வரையப்பட்டுள்ளன. எனவே இலங்கை மன்னர் ஆட்சிக்காலத்தில் மட்டுமன்றி பிற்காலத்திலும், சுவர்ச் சித்திரங்களைத் தீட்டும் வழக்கம் இருந்து வருகிறது. சுவர்ச் சித்திரங்கள் வரைவதில் சிறுவர்கள் குறைந்தவர்களல்ல என்பதைக் கொழும்பில் அண்மையில் நடைபெற்ற சித்திரக் காட்சி புலப்படுத்தியது. ரேயல் ஆரம்பக் கல்லூரிச் சிறுவர்கள் சுவர்ச் சித்திரமொன்றைத் தயாரிப்பதில் கவனஞ் செலுத்துவதை அட்டைப்படம் நன்கெடுத்துக் காட்டுகிறது. பிற்காலத்தில் இவர்களிற் சிலர் சிறந்த ஓவியர்களாக மலரக்கூடும் அல்லவா ? விளையும் பயிரை முளையில் தெரியும் என்பது முதுமொழி.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | கொழும்புத் திட்டம் | 3 |
| 2. | மனித நலனுக்கு கொழும்புத் திட்டம் ஒரு கருவி | 6 |
| 3. | பேருதவிக்கு நன்றி | 8 |
| 4. | வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலை | 9 |
| 5. | "தேடாத் திரவியமே தெள்ளமுதே !" | 13 |
| 6. | பௌத்தம் | 16 |
| 7. | பொங்கும் இன்பம் எங்கும் தங்குக | 19 |
| 8. | நமது கிராம வாழ்க்கை | 21 |
| 9. | சட்ட அறிஞர் மகாநாடு | 29 |
| 10. | யானைக்கும் கலங்கார் | 30 |


1—J. N. B 21158—5,508(1/60)

# கொழும்புத் திட்டம்

**பத்தாவது ஆண்டு நிறைவு**

1950 ம் ஆண்டு ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெற்ற சாம்ராச்சிய நாடுகளின் வெளிநாட்டு மந்திரிமாரின் கூட்டமொன்றிலேதான் கொழும்புத் திட்டம் உருவாகியது. இக்கூட்டம் முதன் முதலாக நடைபெற்ற இடத்தின் பெயரைப் பெற்று இத்திட்டம் கொழும்புத் திட்டம் என வழங்கப்படுகின்றது. இது தெற்கு, தென் கிழக்காசியாவின் கூட்டுறவுப் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு திட்டமாகும். தெற்கு, தென் கிழக்காசியாவின் கூட்டுறவுப் பொருளாதார அபிவிருத்திக்கான யோசனையை 1950 ம் ஆண்டில் பின்வரும் இராச தந்திரிகள் தோற்றுவித்தனர். ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த திரு. பி. சி. ஸ்பெண்டர், கனடாவைச் சேர்ந்த திரு. எல். பி. பியர்சன், இலங்கையைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு. டி. எஸ். சேனநாயக்கா, இந்தியாவைச் சேர்ந்த திரு. ஜவஹர்லால் நேரு, நியூசிலந்தைச் சேர்ந்த திரு. டி. டொய்ஜ், பாகிஸ்தானைச் சேர்ந்த காலஞ் சென்ற ஜனுப் குலாம் முஹம்மது, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. எர்னஸ்ட் பெவின்.

கொழும்புத் திட்டம் ஆரம்பத்தில் சாம்ராச்சிய நாடுகளை மட்டுமே தன்னகத்தடக்கிய போதிலும், அது அப்படிப்பட்ட ஒன்றல்ல. அதிவிரைவில் அது தெற்கு, தென் கிழக்காசிய நாடுகள் அனைத்தையும் அமெரிக்காவையும் ஜப்பானையும் அங்கத்துவ நாடுகளாகச் சேர்த்துக்கொண்டது.

கொழும்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள நாடுகள் பின்வருமாறு ; அவை சேர்ந்த வருடம் நகவளைவுக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஆஸ்திரேலியா .. | (1950) |
| பர்மா .. .. | (1952) |
| கம்போடியா .. | (1951) |
| கனடா .. .. | (1950) |
| இலங்கை .. .. | (1950) |
| இந்தியா .. .. | (1950) |
| இந்தோனீஷியா .. | (1953) |
| ஜப்பான் .. .. | (1954) |
| லாவோஸ் .. .. | (1951) |
| மலாயா .. .. | (1950) |
| நேபாளம் .. .. | (1952) |
| நியூசிலந்து .. | (1950) |
| பாகிஸ்தான் .. | (1950) |
| பிலிப்பைன் தீவுகள் .. | (1954) |
| சிங்கப்பூர் .. .. | (1950) |
| சரவாக், வடபோர்ணியோ .. | (1950) |
| தாய்லாந்து .. | (1954) |
| ஐக்கிய இராச்சியம் .. | (1950) |
| அமெரிக்கா .. | (1951) |
| வியற்னும் .. .. | (1951) |

கொழும்புத் திட்டம் 1950 ல் தயாரிக்கப்பட்ட போது, 1957 ஜூன் மாதத்தோடு முடிவடையும் ஆறு வருட காலத்துக்கென்றே இருந்தது. 1955 ல் இத்திட்டம் 1961 ஜூன் மாதம் வரை நீடிக்கப்பட்டது 1959 ல் நடைபெற்ற ஆலோசனைக் கமிட்டியில், 1966 வரை நீடிக்கப்பட்டது.

கொழும்புத் திட்டம் தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளின் தேசியத் திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கு திரட்டிய ஒன்ருகும். இப்பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகள், இத்திட்டத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் உதவி கொழும்புத் திட்டத்தில் பொதிந்துள்ள சர்வதேசக் கூட்டுறவைப் பிரதிபலிக்கின்றது. இப்பிராந்தியத்தின் அபிவிருத்திக்கான தேவைகளோ அனந்தம். ஆனல் உடனடியாகக் கிடைக்கக்கூடிய தேசீய வழி வகைகள் வரையறுக்கப்பட்டே காணப்படுகின்றன. ஒரு நாட்டின் வழிவகைகளிலுள்ள குறைபாடுகளை நிரப்புவதில் சர்வதேசக் கூட்டுறவு பேருதவி புரிய முடியும். இதனுல் அபிவிருத்தி வேலைகள் துரிதமாக நடைபெறும். இப்படிப்பட்ட உதவியை நாடும் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரிலேயே உதவி வழங்கப்படுகின்றது. எல்லா உதவியும் பரஸ்பர அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது. இதற்கான பேச்சுவார்த்தைகள் உதவியளிக்கும் அரசாங்கத்துக்கும் உதவிபெற்றுக் கொள்ளும் அரசாங்கத்துக்குமிடையில் நடைபெறுகின்றன.

**உதவி வழங்குவது ஏன் ?**

கொழும்புத் திட்டத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் உதவி வழங்குவதற்குரிய காரணம் என்ன ? சமாதானத்தைப் போலவே சுபீட்சமும் பிரிக்க வொண்ணுதது. உலக சனத் தொகையில் கால் வாசிக்கு மேற்பட்ட சனத் தொகையையுடைய தெற்கு, தென்கிழக்காசியா, உலகின் இதர பிராந்தியங்களின் சுபீட்சத்துக்குக் குந்தகம் ஏற்படாமல்

என்றென்றும் வறுமையில் வாடித் தவித்துக் கொண்டிருக்க முடியாது ; இப்பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளுடன் தங்கள் செல்வத்திலும் தொழில் நுட்பத் திறமையிலும் ஒரு பகுதியைப் பகிர்ந்துகொள்ளுவதைக் கொண்டு அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் அந்நாடுகள் உதவிபுரிகின்றன.

கொழும்புத் திட்டத்துக்கு நிர்வாக ஸ்தாபனம் எதுவும் இல்லை. தேசீயத் திட்டங்களின் நிர்வாகம் தெற்கு, தென் கிழக்காசிய நாடுகளின் அரசாங்கங் களினுல் நடத்தப்படுகிறது. கொழும்புத் திட்டத்தைச் சேர்ந்த நாடுகளால் வழங்கப்படும் உதவி, உதவி யளிக்கும் நாட்டினுலும் உதவி பெற்றுக்கொள்ளும் நாட்டினுலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நடைமுறை யின் மூலம் இரு நாடுகளினுலும் கூட்டாக நிர்வகிக் கப்படுகின்றது.

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளின் பொருளா தாரப் பிரச்னைகள் பற்றிய கூட்டுப் பேச்சுவார்த்தை களும் இப்பிரச்னைகளைச் சமாளிப்பதற்கான வழி வகைகளும் வருடத்தில் ஒரு தடவையாகிலும் கூடும் கொழும்புத் திட்ட ஆலோசனைக் கொமிட்டிகளின் மூலமாக ஏற்பாடு செய்யப்படுகின்றன. கொழும்புத் திட்டத்தில் அங்கம் வகிக்கும் நாடுகளின் மந்திரி மார் இந்த ஆலோசனைக் கமிட்டியில் பிரதிநிதித் துவம் வகிக்கின்றனர். இக்கமிட்டியின் திட்டங்கள் பின்வரும் இடங்களில் நடைபெற்றன :—

சிட்னி (1950 மே மாதம்).
லண்டன் (1950 செப்ரெம்பர் மாதம்).
கொழும்பு (1951 பெப்ருவரி மாதம்).
கராச்சி (1952 மார்ச் மாதம்).
புதுடில்லி (1953 ஒக்ரோபர் மாதம்).
ஒட்டாவா (1954 ஒக்ரோபர் மாதம்).
சிங்கப்பூர் (1955 ஒக்ரோபர் மாதம்).
வெலிங்டன் (1956 டிசெம்பர் மாதம்).
சைகோன் (1957 ஒக்ரோபர் மாதம்).
சீற்றில் (1958 ஒக்ரோபர் மாதம்).
ஜகார்த்தா (1959 ஒக்ரோபர் மாதம்).

### கொழும்புத் திட்டச் சபை

கொழும்புத் திட்டத் தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொழில் நுட்ப உதவியை வளர்க்கவும் ஒருமுகப்படுத்தவும், இத் திட்டத்தில் பங்குபற்றும் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட தெற்கு, தென் கிழக் காசியாவில் தொழில் நுட்பக் கூட்டுறவுக்கான கொழும்புத் திட்டச் சபை என்றழைக்கப்படும் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இச்சபை கொழும்பில் தனது கூட்டங்களை ஒழுங்காக நடத்திவருகின்றது. கொழும்புத் திட்டத்துக்கு அதற்கென ஒரு செக்கிறி ரேறியட் இல்லை. கொழும்புத் திட்ட தொழில் நுட்ப கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களைக் கையாளவும் கொழும்புத் திட்டம் பற்றிய தகவல்களை வெளியிட வும் ஒரு கொழும்புத் திட்ட அலுவலகம் இருக் கிறது. இந்த அலுவலகம் கொழும்பில் நிறுவப் பட்டுள்ளது.

ஓர் அரசாங்கம் மற்றோர் அசராங்கத்துக்கு என்ற அடிப்படையில் உதவி வழங்கப்படுகின்றது. அரசாங் கச் சார்பற்ற தாபனங்களும் கூட உதவிபெறலாம். ஆனுல் அப்படிப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட நாட்டினது அரசாங்கத்தின் வாயிலாகச் செய்து கொள்ளப்பட வேண்டும். பின்வரும் முக்கிய வழி களில் உதவி வழங்கப்படுகின்றது :—

தேசீய அபிவிருத்தித் திட்டங்களுக்கு நன்கொடை களும் கடன்களும் ;

உணவுத்தானியங்கள், பசளைகள், நுகர்வுப்பொருட் கள் உட்பட இதர பொருட்கள் ;

இயந்திரங்கள், பண்ணை உபகரணங்கள், போக்கு வரத்து வாகனங்கள், ஆய்கூட உபகரணங் கள் முதலியன உட்பட விசேஷ பொருட் கள் ;

நிபுணர்களதும் நுண் தொழிலாளர்களதும் சேவைகள் ;

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளைச் சேர்ந்த மாண்வ மாணவிகளுக்கு உயர்தர நுண்கலைப் பயிற்சி யளித்தல்.

இவற்றோடு தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களில் தனிப்பட்டவர்கள் முத லீடு செய்வதையும் அங்கத்துவ நாடுகள் ஊக்குவிக் கின்றன.

### உதவியின் தன்மை

பலதரப்பட்ட அநேக துறைகளில் உதவி வழங்கப் பட்டிருக்கிறது. தொகுத்துக் கூறுமிடத்து எல்லா சமூக பொருளாதார அபிவிருத்தித் துறைகளும் கொழும்புத் திட்ட உதவி நிகழ்ச்சி நிரலில் அடங்கு கின்றன. உதவி வழங்கப்பட்ட சில முக்கிய துறை களுள் பின்வருவனவும் சில :

விவசாயத்தை விஞ்ஞான முறையில் அபிவிருத்தி செய்தல்.

தரிசு நிலத்தை மீண்டும் விவசாயத்துக்குரியதாக அபிவிருத்தி செய்தலும் நில நிர்வாகமும்.

நீர்ப்பாசனமும் மின்சாரத்திட்டங்களும், பூச்சிபுழுக் கட்டுப்பாடும் தாவர நோய்களின் தடுப்பும் சிகிச்சையும்.

மிருக வளர்ப்புச் சேவைகள்.

கடற்றொழில் அபிவிருத்தி.

விவசாய ஆராய்ச்சி.

இரும்பு, எஃகு, பசளைகள் போன்ற அடிப்படைக் கைத்தொழில்கள்.

நுகர்வுப் பொருட் கைத்தொழில்கள்.

சிறிய கைத்தொழில்களும் கிராமக் கைத்தொழில்களும்.

கைத்தொழிலாராய்ச்சி.

புகையிரத புனருத்தாரணமும் விஸ்தரிப்பும்.

துறைமுக அபிவிருத்தி.

தேசீயப் பெரு வீதிகளும் தெருக்களும்.

நோய்களிலிருந்து பாதுகாப்பும் சூழ்நிலைச் சுகாதாரமும்.

மலேரியா, கயரோக ஒழிப்பு, போஷணை, சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்.

பயிற்சி நிலையங்களை நிறுவுதல்.

தெற்கு, தென் கிழக்கு ஆசிய மாணவர்களுக்கு வெளிநாடுகளில் பயிற்சியளித்தல்.

**உதவிபுரிந்த நாடுகள்**

கொழும்புத் திட்டம் ஒரு கூட்டுறவு முயற்சியாகும். எனவே ஒவ்வொரு அங்கத்துவ நாடும் தன்னாலியன்றவரை உதவிபுரிய முயலுகின்றது. ஆயினும் சில அங்கத்துவ நாடுகளின் ஆற்றல் இதர நாடுகளைவிட அதிகமாகும். இதனால் நாடுகளால் வழங்கப்படும் உதவியின் அளவு உண்மையில் கூடிக் குறைந்து காணப்படுகின்றது. தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளுக்கு மூலதன உதவியும் தொழில் நுட்ப உதவியும் அளித்துள்ள நாடுகளில் ஆஸ்திரேலியா, கனடா, இந்தியா, ஜப்பான், நியூசீலந்து, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளும் அடங்குகின்றன. பர்மா, இலங்கை, இந்தோனீஷியா, மலாயா, பாகிஸ்தான், சிங்கப்பூர் ஆகிய இப்பிரதேசத்தைச் சேர்ந்த இதர நாடுகள் தெற்கு தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஒரு நாட்டுக்கோ அதிகமான நாடுகளுக்கோ தொழில் நுட்ப உதவிபுரிந்திருக்கின்றன.

**பயன்**

கொழும்புத் திட்டம் தேசீய முயற்சிக்கு ஊக்கமளித்திருப்பதே அதனால் ஏற்பட்ட நேரடியான பயனாகும். பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் குறிப்பாக உதவி அதிகம் தேவைப்படும் துறைகளில் உதவி அளிப்பதன் மூலம் தேசீய அரசாங்கங்கள் அவற்றின் அபிவிருத்தித் திட்டங்களைத் துரிதமாக அமுல் நடத்த அது உதவிபுரிகின்றன.

தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களிற் காணப்படும் முன்னேற்றத்தில் கொழும்புத் திட்டத்தின் சாதனைகள் பிரதிபலிக்கின்றன. இந்நாடுகளின் அபிவிருத்தித்திட்டங்களில் குறுக்கிட்ட கஷ்டங்களிற் சிலவற்றை அவை கொழும்புத் திட்டத்தின் உதவிமூலம் தீர்த்துக் கொண்டன. தேசீய அபிவிருத்தித் திட்டங்கள் இதைக்கொண்டு மிகவும் துரிதமாக அமுல் நடாத்தப் பட்டுள்ளன.

அபிவிருத்திக்காகக் கையாளும் முறைகளைத் துரிதப்படுத்துவதற்கு எல்லா நாடுகளும் திட்டங்களை வகுத்து வருகின்றன. பர்மா, கம்போடியா, இந்தியா, இந்தோனீஷியா, லாவோஸ், மலாயா, நேபாளம், பாகிஸ்தான், பிலிப்பைன் தீவுகள், சிங்கப்பூர், சரவாக், வடபோர்ணியோ ஆகிய நாடுகள் அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டுள்ளன.

தேசீயத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக இப்பிராந்தியம் பொதுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்நாடுகளின் இயற்கை வளங்கள் நவீன விஞ்ஞானத்தின் உதவியுடன் உபயோகப் படுத்தப்படுகின்றன. வயல்களுக்குத் தண்ணீரும் கைத்தொழிலுக்கு மின்சக்தியும் வழங்கக்கூடியதாக ஆறுகளுக்கு அணையிடப்படுகின்றன.

தேசீய திட்டங்களில் புகையிரதப் பாதைகள், வீதிகள், துறைமுகங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தி குறிப்பிடத்தக்க முக்யத்துவம் பெற்றுவருகின்றது. யுத்த காலத்தில் அதிக வேலைக்கு இலக்கான பெரும் நாடுகளின் புகையிரத அமைப்புகள் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. துறைமுகங்களும் விமானத் தளங்களும் பாலங்களும் கட்டப்பட்டு, பல்லாயிரக் கணக்கான மைல் நீளமுள்ள வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மக்களின் சுகாதாரத்துக்கு அதிக கவனம்செலுத்தப்படுகிறது. அரசாங்கங்களால் மேற்கொள்ளப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரல்களின் வாயிலாக மலேரியா, கயரோகம், வாந்திபேதி, சின்னம்மை போன்ற நோய்களுக் கெதிராக அதிக பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது. கல்வி ஊக்குவிக்கப்பட்டுள்ளது. அதிக மதிகமான பிள்ளைகள் பாடசாலைகளுக்குச் செல்கிறார்கள். ஆயிரக்கணக்கான புதிய பாடசாலைகள் திறந்துவைக்கப்பட்டுள்ளன. தொழிற்கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இப்பிராந்தியத்தைச் சேர்ந்த பலநாடுகளில் சமுதாய அபிவிருத்தித்திட்டங்கள் மூலமாக பொதுசன சேமாபிவிருத்தி வேலைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் மக்களின் இஷ்டபூர்வமான முயற்சியுடன் அரசாங்கத்தின் உதவியும் சேர்ந்து சமுதாயத்துக்குப் புதிய செல்வத்தை அமைப்பதோடு மட்டுமல்லாமல் மக்களிடையே சுயதேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியையும் வளர்த்துள்ளது.

**தொழில் நுட்ப விருத்தி**

ஒரு புதிய தொழில் நுட்ப நோக்கம் விருத்தி செய்யப்பட்டுவருகின்றது. நவீன விஞ்ஞானம் விவசாயப் பழக்கங்களை விருத்திசெய்து, உற்பத்தியையும் அதிகரித்திருக்கின்றது. நவீன இயந்திர சாதனங்களின் உதவியுடன் தொழில் நுட்பத்திறமையைக் கொண்டு இயற்கைவளங்கள் உபயோகப்படுத்திக்கொள்ளப்பட்டுவருகின்றன. நோய்களை எதிர்க்கவும் கொள்ளை நோய்களைக் கட்டுப்படுத்தவும், கல்வியை வளர்க்கவும் வீதிகள், பாலங்கள், துறைமுகங்கள், தேசிய அபிவிருத்திக்கான கைத்தொழில்கள் ஆகியவற்றை நிறுவவும் விஞ்ஞானம் உதவிபுரிகின்றது. இப்பிராந்தியத்திலும், கொழும்புத்திட்ட நாடுகளிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏராளமான நிலையங்களில் இப்பிராந்தியத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்தர தொழில் நுட்ப அறிவைப் பெற்றுவருகின்றனர்.

கொழும்புத் திட்டத்தின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் வேலைசெய்யும் கொழும்புத்திட்ட தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் தொழில் நுட்ப உதவி வழங்கப்படுகின்றது. இத்திட்டத்தின்படி மூன்று பிரதான வழிகளில் உதவி வழங்கப்படுகின்றது.

**நிபுணர்களினதும் நுண் தொழிலாளரினதும் சேவைகள் :**

இவர்கள் உயர்தர தொழில் நுட்ப அறிவுடனும் திறமையுடனும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களை தயாரிப்பதிலும் அமுல் நடாத்துவதிலும் உதவி புரிந்திருக்கின்றனர்.

**பயிற்சி வசதிகள்.**—இப்பிராந்தியத்தில் தொழில் நுட்பப் பயிற்சிக்கான வசதிகள் பொதுவாகக்குறைந்தே காணப்படுகின்றன. கொழும்புத்திட்ட தொழில் நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ், தெற்கு, தென் கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் இஞ்சினீயரிங், விவசாயம், வன விருத்தி, சௌக்கியம், கடற்றொழில், கூட்டுறவு, வங்கித் தொழில், கல்வி, போக்குவரவு, கைத் தொழில், மின்சாரம், எரிபொருள், சமூகசேவைகள் ஆதிய துறைகளில் கொழும்புத் திட்டத்தின் அங்கத்துவ நாடுகளில் பயிற்சி பெற்றிருக்கின்றனர்.

**பயிற்சியிலும் ஆராய்ச்சியிலும் உதவிபுரிதற்கான விசேஷ உபகரணங்கள்.**—பயிற்சி அளித்தலில் உதவிபுரிவதுடன் இப்பிராந்தியத்தில் தொழில்நுட்ப நிலையங்களுக்கும் தேவையான உபகரணங்களை ஓரளவுக்கு வழங்குவதிலும் தேசிய அரசாங்கங்களுக்கு இவை உதவிபுரிந்திருக்கின்றன. கொழும்புத்திட்ட ஆரம்ப காலத்திலிருந்து பல்வேறு துறைகளில் இலங்கைக்கு நிபுணர்களின் உதவி கிடைத்திருக்கிறது. மேலும் இலங்கையிலிருந்து 1,032 பேர்வரை வெளிநாடுகளில் பயிற்சி பெறச் சென்றுள்ளார்கள். பிரிட்டன், ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், கனடா, நியூசிலந்து ஆகிய நாடுகளில் பலதுறைகளில் பயிற்சிபெற இலங்கையர் சென்றிருக்கின்றனர். இலங்கையும் பிற நாட்டிலுள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்க உதவி செய்துள்ளது.

---

# மனித நலனுக்கு கொழும்புத் திட்டம் ஒரு கருவி

**திரு. ஜே. கே. தொம்சன் அதிபர், கொழும்புத்திட்ட அலுவலகம்**

" ஆசிய மக்கள் வறுமை, பசி, போன்றவற்றின் கொடுமையை நெடுங்காலமாக உணர்ந்து வருகிறார்கள் ". 1950 ல் நிறுவப்பட்ட ஆலோசக கமிட்டி கொழும்புத் திட்டத்தைப் பற்றித் தயாரித்த முதல் வாசகம் தான் மேலே காணப்படுவது. மனித ஜீவன்களின் தேவைகளை அளித்ததனுலும், அவர்களது நலனில் அக்கறை காட்டியதனுலும் கொழும்புத்திட்ட முயற்சி விரைவில் வளர்ந்தோங்கியது. அதன் சாதனைகள் வெறும் ரூபாய், சதத்திலோ, கொடுத்து உதவப்பட்ட நிபுணர்கள் அல்லது பயிற்றப்பட்ட தொழில் நுட்ப திறமைசாலிகளைக் கொண்டோ மதிப்பிடப்படவில்லை. தெற்கு, தென் கிழக்கு

ஆசிய நாட்டு மக்களின் பொருளாதாரப் பிரச்னை கள் எவ்வளவில் தளர்த்தப்பட்டுள்ளன என்பதைக் கொண்டே மதிப்பிடப்படுகிறது.

கொழும்புத் திட்டத்தின் நோக்கங்கள் 1950 இல் பிரகடனப் படுத்தியவாறே இருக்கின்றன. உலக யுத்தத்துக்குப் பின்னர், தெற்கு, தென்கிழக்காசியப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் கூட்டத்தின் வறிய வாழ்க்கை நிலையை விளக்கின. அவர்களுக்கு ஆகக் குறைந்த ஒரு வாழ்க்கைத் தரத்தை எய்த வகை செய்வதே ஒரு சவால். மனப்போக்கை மாற்றி, நிறைவேறக் கூடிய சாதனைகளில் நம்பிக்கைகொள் ளச் செய்ய வேண்டியிருந்தது.

தேங்கிக்கிடந்த சக்திகளைத் தட்டி எழுப்பி புது முனைகளில் திருப்ப வேண்டியிருந்தது. இப்பிரதேச மக்கள் உயிராகப் போற்றும் புதிய தேசீய சுதந் திரப் பற்றை ஊறு செய்யாத வகையில் வெளி நாடுகளில் இருந்து உதவி ஊட்ட வேண்டியும் இருந்தது.

"கூட்டுறவுப் பொருளாதார அபிவிருத்தியே" கொழும்புத் திட்டத்தின் குறிக்கோள். விஞ்ஞானத் தையும் தொழில் நுட்பத்தையும் மனித இனத்தின் பொது நன்மைக்குப் பயன்படுத்த முயற்சி செய்த காலம் 1950 ம் ஆண்டும் அதற்குப் பின்னைய வருடங்களும் என சரித்திரம் பேசும். ஆக்க வேலைத் துறையில் பலப்பல சாதனைகள் ; அதே சமயத்தில் நாட்டுப்புறத் தோற்றங்கள் மாறின ; மக்களின் பரம் பரை வாழ்க்கை முறை துண்டிக்கப்பட்டது. அபி விருத்தி என்றால் மாற்றம்தான். ஆனால் மாற் றத்தை எங்கு உள்ள மக்களும் எதிர்பார்ப்பார்கள். அனுகூலங்களையும் வாழ்க்கை வசதிகளையும் விரும்பு வார்கள். அவற்றினால் அவர்களது வாழ்க்கைமுறை சற்று மாறினால் கலக்கமடைவார்கள். வளமான வாழ்க்கைக்கும்—சமூக சேவைகளுக்கும் பொரு ளாதார அபிவிருத்தி அவசியம். இதில் உதவுவதே கொழும்புத் திட்டத்தின் முக்கிய அம்சம்.

சுகாதாரத் துறைக்கென நியூசீலந்து கொழும்புத் திட்டத்தின் மூலம் பெரும் உதவி வழங்கியுள்ளது. இந்தியா, இந்தோனேஷியா, இலங்கை, கம்போ டியா, லாவோஸ், வடக்கு போர்ணியோ, சரவாக், வியட்நாம், நேப்பாளம் முதலிய நாடுகளில் மலே ரியா வியாதியைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்கா வும் உதவி அளித்துள்ளது. இப்பிரதேசங்களில் காச நோயைத் தடுக்க அவுஸ்திரேலியாவும் இங்கிலாந் தும் உதவி அளித்துள்ளன. காசநோய்த் தடுப்புத் துறையில் இலங்கை, இந்தியா, நேபாளம், தாய் லாந்து, இந்தோனேஷியா போன்ற நாடுகளுக்கு இங்கிலாந்து, யப்பான் போன்ற நாடுகளும் பயிற்சி அளித்து உதவியுள்ளன. கனடா தேசம் புற்று நோயைத் தடுப்பதற்கு பர்மா, இந்தியா, இலங்கை ஆதிய நாடுகளுக்கு உபகரணங்களும், பயிற்சியும் அளித்தது. பாகிஸ்தான், மலேயா, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் சுதேச வைத்திய முறைகளை விருத்தி செய்வதற்கு இங்கிலாந்து உதவியது.

பொருளாதார அபிவிருத்திக்கு உதவக்கூடிய வகையில் தொழிற் கல்வி, நுண்தொழில் பயிற்சி முதலியவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப் பட்டன. கல்வித்துறையில் அளிக்கப்பட்ட உதவிகளி னால் பயன்பெற்ற நாடுகளில் சில மலேயா, கோலா லம்பூர், சரவாக், கம்போடியா, லாவோஸ், இந்தோ னேஷியா, வடக்கு போர்ணியோ, வியட்னாம், இந்தியா, இலங்கை, நேபாளம் முதலிய னவாகும். நியூசீலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா முதலிய நாடுகள் அத்தகைய உதவிகள் வழங்கிய நாடுகளுள் சில.

கொழும்புத்திட்டத்தின் கீழ் எவ்வளவோ சாதிக் கப்பட்டுள்ளன. எனினும் இன்னும் மக்களுக்குப் பல தேவைகள் இருந்துகொண்டே இருக்கின்றன. உலகின் பதினாற்றில் ஒரு பங்கு இப்பிரதேசத்தில் அடங்கிக் கிடக்கிறது. உலக ஜனத்தொகையில் கால் பங்கு இப்பிரதேசத்தில் உள்ளது. இந்த ஜனத் தொகை வருடாந்தம் ஒரு கோடி வீதம் அதிகரித் துக்கொண்டிருக்கிறது. இதனால் பொருளாதாரப் பிரச்னைகள் சிக்கல் அடைகின்றன. இப்பிரதேசத்தில் வாழும் மக்களும், வெளியேயுள்ள நல்லெண்ணம் வாய்ந்த மக்களும் கூட்டாகச் சேர்ந்து முயற்சி செய்தாலே தவிர, இப்பிரச்னைகளைத் தீர்ப்பது சுலப மல்ல.

# "பேருதவிக்கு நன்றி" — பிரதமர்

## கொழும்புத் திட்டப் பத்தாண்டு நிறைவையொட்டி பிரதமர் விடுத்த நற்செய்தி

அபிவிருத்திக் குறைவான நாடுகளில் சர்வதேச ஒத்துழைப்புடன் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த வேண்டும் என்பது யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட ஒரு கருத்தாகும். இலங்கையின் முதலாவது பிரதமரின் தலைமையில் 1950 ஜனவரி மாதம் கொழும்பில் நடைபெற்ற சாம்ராச்சிய நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகளின் கூட்டத்திலே கூட்டுறவு மூலம் பொருளாதார அபிவிருத்தி என்ற கருத்து எழுந்தபோதே, ஆசியா சம்பந்தப்பட்டவரையில் சர்வதேச பொருளாதாரக் கூட்டுறவு என்ற கோட்பாடு முதன்முறையாகப் பரிசீலனை செய்யப்பட்டது.

அச் சந்தர்ப்பத்தில் இலங்கையும் முக்கிய ஸ்தானத்தை வகித்தது. ஒரு வருடத்துக்குள், உலகம் அறிந்த கொழும்புத் திட்டம் உருவாகியது.

கொழும்புத் திட்டம் உருப்பெற்ற பத்தாவது ஆண்டு நிறைவு விழா அதன் அங்க நாடுகளில் இன்று நினைவுபடுத்தப்படுகிறது. இலங்கை அரசாங்கமும், மக்களும் கொழும்புத் திட்டத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளனர். இன்றைய சரித்திரத்தில் கொழும்பு மகாநாடு பெரும் விளைவை ஏற்படுத்தக்கூடிய தொன்ருக விளங்குகிறது. யுத்தத்துக்குப் பின்னர், ஆசியாவின் பிரச்னைகளை ஆசிய சூழ்நிலையிலேயே ஆசியக் கண்கொண்டு நோக்கி அவற்றுக்குத் தீர்வுகாண முயற்சித்த முதல் மகாநாடு இதுவேயாகும்.

காலப் போக்கில் கொழும்புத் திட்டத்தின் அங்கத்துவமும் விரிவடைந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் சாம்ராச்சிய நாடுகள் மாத்திரம் சம்பந்தப்பட்டிருந்த இத்திட்டத்தில் இப்போது 21 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றுள் பத்து நாடுகள் காமன்வெல்துக்கு வெளியே உள்ளவை. இவ்வாறு தான் இருக்கவும் வேண்டும். இப்பிரதேசத்தில் உள்ள நாடுகள் அனைத்தும் இப்போது கொழும்புத் திட்டத்தில் அங்கம் வகிக்கின்றன. இப் பிரதேசத்துக்கு வெளியிலிருந்து கொண்டு இம் மகத்தான கூட்டு முயற்சிக்கு உதவி அளிக்கும் இதர நாடுகள் அவுஸ்திரேலியா, கனடா, யப்பான், நியூசிலந்து, ஐக்கிய நாடுகள், அமெரிக்கா முதலியனவாகும். கடந்த பத்து வருடங்களிலும், இப்பிரதேச மக்களுக்கு நலன்புரியும் ஓர் உன்னத கருவியாகக் கொழும்புத் திட்டம் விளங்கிவந்துள்ளது.

அங்க நாடுகள் தொழில் நுட்பம், மூலதனம் முதலியனவாகப் பயன்மிக்க, மதிப்புவாய்ந்த உதவிகளை நல்கியமைக்காக இலங்கை அரசாங்கம் மிக்க நன்றியுடையதாக இருக்கிறது.

இம்மகத்தான கூட்டுறவுத் திட்டத்தில் தெற்கு, தென்கிழக்கு ஆசியப் பிரதேசத்தைச் சார்ந்த 15 அங்க நாடுகளும் தங்களுக்கிடையிலேயே பரஸ்பர உதவிகளும் செய்து கொண்டன என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். இலங்கையும், சிறிதளவிலேனும், கொழும்புத் திட்டத்தில் அங்கம் வகிக்கும் அண்டை நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி வழங்கியதன் மூலம் பரஸ்பர கூட்டுறவுத் திட்டத்துக்குத் தன் பங்கைச் செலுத்தியுள்ளது.

கொழும்புத் திட்டம் பொருளாதாரக் கோளாறுகள் அனைத்துக்கும் தீர்வு கண்டுவிட்டது என பாசாங்கு செய்யப்படவில்லை. எனினும், நம்பிக்கையையும் நேசத்தையும் அடிப்படையாகக் கொண்ட இக் கூட்டுறவு முயற்சி எமது பிரச்னைகளைச் சேர்ந்து நின்று தீர்ப்பதில் அதிக அளவு ஆர்வத்தையும் நல்லெண்ணத்தையும் தோற்றுவித்தது ; தெற்கு, தென் கிழக்காசியா நாடுகளில் வாழும் பல கோடி மக்களின் சமூக, பொருளாதார நிலைகளைச் செம்மைப்படுத்துவதில் ஒரு நம்பிக்கையையும் ஏற்படுத்தியது என தைரியமாக நிச்சயப்படுத்திக் கூறலாம்.

இதுவரை கொழும்புத் திட்டத்தின் சாதனைகள் குறிப்பிடத்தக்கவையாகவே உள்ளன. ஆனால், இன்னும் எத்தனையோ பிரச்னைகள் எதிர்நோக்கியும் உள்ளன. பத்தாவது ஆண்டு நிறைவின்போது, இப்பிரச்னைகளைத் தீர்க்க எம்மை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்வோமாக.

### வைத்தியசாலைகளுக்கு 2,000 படுக்கைகள்

நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்ததினுல் நெருக்கடி ஏற்பட்டுள்ள வைத்தியசாலைகளில் மேலும் 2,000 படுக்கைகளைச் சேர்ப்பதற்கு சுகாதார

(26 ம் பக்கம் பார்க்க)

# வாழைச்சேனைக் காகிதத் தொழிற்சாலை

## 1959 ம் ஆண்டில் 4,187 தொன் காகிதம் உற்பத்தி


வாழைச்சேனையிலுள்ள ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ், என்னும் காகிதத் தொழிற்சாலை 1959 ம் ஆண்டில் அச்சுத்தாள், எழுத்துத்தாள் ஆகிய வகைகளில் மொத்தம் 4,187 தொன்களை உற்பத்தி செய்து ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளது. 1959 ஜனவரி 29 ஆம் திகதி தொடக்கம் மில்லில் வேலை ஆரம்பித்தது. அன்று தொடக்கம் முழு அளவில் நடைபெற்று வருகிறது. பொது விடுமுறைத் தினங்கள், இயந்திரங்களை நன்னிலைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நாட்கள் ஆகியவற்றைத் தவிர, மற்றைய நாட்களில் 8 மணித் தியாலங்களைக் கொண்ட மூன்று வேலைக்காலத் திட்டப்படி வேலை தொடர்ந்து, நடைபெறுகிறது. 24 மணித்தியாலங்களில் அதாவது ஒரு முழு நாளில் சராசரி 16 தொன் காகிதம் உற்பத்தியாகிறது. யந்திரங்களை வழங்கியவர்கள் நாள் ஒன்றுக்கு $12\frac{1}{2}$ தொன் உற்பத்திச் சக்தியே இருக்குமெனக் கூறினர்.


தொழில் நுட்ப ஆலோசகர்களின் சிபார்சுகளை அமுல் நடத்துவதற்கு முன்னரேதான் 4,187 தொன் உற்பத்தியாகியுள்ளது. அவர்களது சிபார்சுகளில் சிலவற்றை அமுல் நடத்தினாலும் குறைந்த அளவு வருடத்துக்கு 6,000 தொன் உற்பத்தி செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

உற்பத்தி செய்யப்படும் கடுதாசி வகையைப் பொறுத்து, தற்போது 40-60 சத வீதம் மரக்கூழ் இறக்குமதி செய்யப்படுகிறது. தொழில் நுட்ப ஆலோசகர்களின் சிபார்சுகளை அமுல் நடத்தினால் இந்த இறக்குமதி விகிதத்தை 15-30 சத வீதமாக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் இலாகா இத்தொழிற்சாலையை 1955 ஒக்ரோபர் மாதத்திலேயே கூட்டுத் தபானத்துக்குக் கையளித்தது. 1955 தொடக்கம் 1958 வரை அதாவது மூன்று வருடங்களின் மொத்த உற்பத்தி


வாழைச்சேனையில் காகிதம் செய்யும் இயந்திரம்—முதற்படி.






மரக்கூழிலிருந்து மணல் முதலிய வேறு பொருட்களை நீக்கும் கருவி.

மரக்கூழை வெள்ளை நிறமாக்கும் இயர்திரம்.



கடுதாசி



செய்து முடிக்கப்பெற்ற காகிதம் இயந்திரத்தால் சுருள்களாகச் சுற்றப்படுகிறது.

2,900 தொன்களேயாகும். இது 1959 ஆம் ஆண்டின் உற்பத்தியில் முக்கால் பங்கிலும் குறைவானதேயாகும்.


அரசாங்க வெளியீடுகள், பத்திரங்கள் முதலியன இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் கடுதாசிகளிலேயே அச்சிடப்படுகின்றன. கடுதாசியின் தரம் மிகத் திருப்திகரமாக இருப்பதாகவும் எல்லா அடிப்படையிலும் உகந்ததாக உள்ளதாகவும் அரசாங்க அச்சக அதிபர் அறிவிக்கிறார்.

எழுத்துக் கடுதாசிகள், பிரதிபடுத்தும் கடுதாசிகள் முதலியனவற்றை இப்போது சகல அரசாங்க அலுவலகங்களும் உபயோகிக்கின்றன. பயிற்சிக் கொப்பிகள் தயாரிப்பதற்கும் இக்கடுதாசி உகந்ததாக உள்ளது. பயிற்சிக் கொப்பி உற்பத்தியாளர்களுடன் ஏற்பாடு செய்துகொண்டு, இக்கூட்டுத் தாபனம் உற்பத்தியில் ஒரு பாகத்தைக் கொண்டு பயிற்சிக் கொப்பிகளும் டாப்புகளும் தயாரிக்கின்றது. இவை போட்டி விலையில் இம்மாதத்திலிருந்து பொதுமக்களுக்குக் கிடைக்கும். தனியார் துறைக்கும் இதர கடுதாசி இனங்களை விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

உற்பத்திச் செலவு நியாயமான அளவிற்குக் குறைந்து விட்டது. 1960 இல் உற்பத்திச் செலவு இன்னும் குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது கடுதாசித் தொழிற்சாலை இலாபகரமான ஸ்தாபனமாக விளங்கும்.

4,187 தொன் கடுதாசி உற்பத்தி செய்வதற்கு 3,150 தொன் நெல் வைக்கோல், 515 இலுக்குப் புல், 2,398 தொன் இறக்குமதி செய்யப்பட்ட மரச் சோற்றி, 1,850 தொன் ரசாயனங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டுள்ளன. 1960 ஆம் ஆண்டின் போது சுற்றுப் புறங்களிலிருந்து 10,000 தொன் நெல் வைக்கோலைப் பெற்றுப் பயன்படுத்தவும், இறக்குமதி செய்யப்படும் மரச் சோற்றியின் அளவைக் குறைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இறக்குமதி செய்யப்படும் ரசாயனங்களில் 750 தொன் பரந்தன் ரயாசனத் தொழிற்சாலை தொழிற்படத் தொடங்கியதும் அதனிடமிருந்து வாங்கப்படும்.

தற்போதைய உற்பத்தியில் பெரும்பாகத்தை அரசாங்க பண்டசாலை அதிபரும், அரசாங்க அச்சக அதிபருமே வாங்குகின்றனர்.



செய்துமுடிக்கப்பெற்ற காகிதத்தை காகித விற்பன்னர் திரு. ஆர். பி. சிங்கம் பார்வையிடுகிருர்.

நாட்டுப் பாடல்

# "தேடாத் திரவியமே தெள்ளமுதே!"

திரு. கா. நவரெத்தினம்

"அழகன்" என்றால் அவனைத் தெரியாதவர்களே கிடையாது; அந்தக் கிராமத்தில். அவ்வளவுக்கு அறிமுகப்பட்டிருந்தான். இப்படிப் பிரபல்யம் பெற்ற அவன் ஒரு அரசியல் வாதியோ அல்லது சமூகச் சீர்திருத்த வாதியோ அல்ல. சாதாரணமான வயல்வேலை செய்பவன். என்றாலும் அழகனுக்கு வயல்வேலை தான் செய்ய வேண்டும் என்ற நியதியில்லை.

கமம் செய்யும் நாட்களைத் தவிர்ந்த ஏனைய நாட்களில் யார் எந்த வேலைசெய்யக் கூப்பிட்டாலும் மறுக்காது வருவான். தான் செய்யும் வேலைக்குக் கூலியாக அவ்வளவு தரவேண்டும், இவ்வளவு தரவேண்டும் என வற்புறுத்திக் கேட்க மாட்டான். கிடைத்ததில் திருப்திப்பட்டுக் கொள்வான். பணம் இல்லாவிட்டால் கூட ஒரு நேரச் சோறு கொடுத்தாலே போதும். முகமலர்ச்சியோடு ஏற்றுக்கொள்வான். அவ்வளவுக்கு நல்லவன். வேலிகட்டவும், வீடு வேயவும், புல்லுக்கொத்தவும், வேறு எந்த வேலையாயினும் சரி அவன் தொழில் செய்யாத வீடே கிடையாது; அந்தக் கிராமத்தில். வேலை இல்லாத நேரத்திலும் கூட அந்த ஊரைப் பல முறை சுற்றி வராவிட்டால் அழகனுக்கு அன்றையப் பொழுது சுவையின்றிச் சப்பென்றிருக்கும்.

தினம் நாலு, ஐந்து முறை சந்தித்த அழகனைப் பலவாரங்களாகக் காணமுடியவில்லை. வெளியில் தலைகாட்டவே இல்லை அவன். வீட்டுக்குச் சென்று பார்த்த பொழுது ஆள் முன்பிருந்ததுபோல் அல்லாமல் கலகலப்பின்றிச் சோர்ந்து போய் இருந்தான். முகம்வாடி, ஆளே வதங்கிப்போனான். அழகனைப் புதிதாகப் பார்ப்போர் தீராத நோயாளி என்றே நம்புவர். உண்மையில் அப்படி ஒரு நோயுமல்ல அவனுக்கு; உடல் நிலையைப் பொறுத்தவரை. ஆனால் உள்ளத்தைப் பொறுத்தமட்டில் ஆம்! அங்கே தான் ஒரு கோளாறு இருந்தது. இனம் புரியாத ஒருவித வேதனை அவன் உள்ளத்தை தோண்டி, தோண்டித் தின்றுவந்தது.

வீட்டுச் சுவருக்குச் சுண்ணம்பு பூச ஆள் தேவையாக இருந்தது; எனக்கு அழகனை விட்டால் வேறு யார்? அவனைத் தேடிப்போனேன் வீட்டுக்கு. வம்மியடித்தெருவில் இருக்கும் மதிலோரத்தில் அவன் நிற்பதை நான் கண்டுகொண்டேன். அங்கே என்ன செய்கிறான் என்பதை அறியவேண்டுமென என் உள்ளுணர்வு தூண்டியது. அங்கே எவரையோ எதிர்பார்க்கிறான் போல் தோன்றியதும் நான் இன்னும் நெருங்கிச் சென்று அவனை அறியாமல் பக்கத்திலிருந்த மரத்தடியில் ஒதுங்கிக்கொண்டேன்.

அதோ! அழகன் மதிலுக்கு மேலால் எட்டிப் பார்த்துவிட்டுப் பாடுகிறான்:

**"வாடாத பூவே**
**மணமுள்ள செம்பகமே**
**தேடாத் திரவியமே**
**தெள்ளமுதே வள்ளியம்மை"**

உள்ளே இருந்தும், மெல்லிய குரல் ஒன்று குயில் பாடுவதுபோல்கேட்டது. காதை நன்றாகச் சாய்த்து உற்றுக்கேட்டேன். அவள் தான் வள்ளியம்மை போலும்:

**"வாறதுந்தான் போறதுந்தான்**
**வளவைச் சுற்றிப் பார்ப்பதுந்தான்**
**செப்பைத் திறந்து—மச்சான்**
**தேனெடுத்துத் தின்னயில்ல"**

அதே குரல் மீண்டும் கேட்டது:

**"மஞ்சள் அரைக்கையிலே**
**மதில்ஏறிப் பார்த்த மச்சான்**
**என்ன பொடி தூவினீங்க**
**இழுத்ததரைக்கக் கூடுதில்ல"**

என்று அவள் கூறியதும், நான் அப்படி ஒன்றும் தூள் போட்டு வசியம் பண்ணும் போக்கற்றவன் அல்ல என்று சொன்னவன்; தொடர்ந்து சொல்கிறான்:

**"பொன்னவரை பூத்துப்**
**பூவோடு சாய்ந்ததுபோல்—என்ர**
**பொன்னான சீவன் மச்சி**
**போகுதடி உன்னால"**

தனது துயரத்தை அறிந்தும் பேசாதிருக்கிறாளே என்ற ஆத்திரத்தில் திரும்பவும் பாடுகிறான்:

**"வட்ட முகமும்**
**வரிசையுள்ள பல்லழகும்**
**தேமல் அழகும்**
**திகட்டுதுகா நித்திரையில்"**

அழகன் உள்ளத்தைத் திறந்து சொன்னதும் வள்ளியம்மையின் மனம் நெகிழ்ந்துபோயிற்று. அவளும் அதைத் தானே எதிர்பார்த்து ஏங்கு கிருள். ஒரு ஆண்மகனே தன் எண்ணத்தை வாய் விட்டுச் சொல்லிய பொழுது நாம் சொன்னுல் என்ன என்ற எண்ணம் போலும் :

"வாடுகிறேன் ராசா
வதங்குகிறேன் கீரையைப்போல்
சோருகிறேன் ராசா—எனக்கு
சோறு தண்ணி இல்லாம "

"நாம் உண்மையிலே சாப்பாட்டுக்கு வழியின்றி பட்டினியாக இருக்கிறோம் என எண்ணிவிடுவான் அழகன்" என்ற சந்தேகத்தில் திரும்பவும் தன் துயரை உறுதியாகச் சொல்கிருள் :

"உண்ணுமை வாடயில்ல
உறங்காம வாடயில்ல
கண்ணுன மச்சான்—நான்
கவலேயிலே வாடுகிறேன் "

உணவும் உறக்கமும் இருந்தால் வேறு என்ன கவலே ? ஒரு வேளே நான் அவளே விரும்பவில்லே என்று எண்ணிக்கொண்டாளோ எனச் சிந்தித்த அழகன் :

"வண்டழுத சோலேயில
வந்தழுத மான்கலேபோல்
நிண்டழுதேன் கண்ணே—உன்ர
நினேவு வந்த நேரமெல்லாம் "

நீ நினேத்து என்ன செய்யமுடியும் ? எனது கலக்கத்தை என்னேப் பெற்றவர்களும், கட்டிக் கொடுப்பவர்களுமல்லவா உணரவேண்டும். அதைப் பற்றியே அவர்கள் சிந்திக்கவில்லேயே எனச் சொல் கிருள் வள்ளியம்மை :

"தண்ணீ ரில்லா வட்டையில
தாமரைப் பூ மலர்ந்ததுபோல்—நான்
கன்னிக் குமரிருந்து
கலங்கிறதை யார் அறிவார்"

என்றுலும் அவள் பேச்சில் பூரண திருப்தியும், நம்பிக்கையும் ஏற்படவில்லே அழகனுக்கு. அவன் முன்பு வள்ளியம்மையைக் காதலித்திருந்தும் அவளே உதறித் தள்ளிவிட்டு வேறு ஒருத்தியை மணம் செய்தவன். ஆனுல் மனேவி தாலிகட்டி ஆறு மாதங்களிலேயே இறந்து விட்டாள். அப்படி யான அவனுக்கு இப்பொழுது என்ன ? தாரமிழந் தது ஒரு குறையா ? "பெண் செத்தவன் புது மாப்பிள்ளே தானே !", என்றும் அவன் மனம் எண்ணியது.

ஒருவேளே தன்னேக் கட்டிக்கொள்ள பிரியமில் லாமல் தான் கலங்குகிருளோ ? என நினேத்தவன் அதையே அவளிடம் வாய்விட்டுக் கேட்கிருன் :

"நிலவிலேயும் இளநிலவே
நீர்க் குமிழித் தாராவே
அறையிலுள்ள ஆணி முத்தே—உன்னே
ஆர்க்கு விலே பேசிருக்கு "

தன்னே யாருக்கும் பேசி இருக்கு என்று சொல்ல வில்லே ; வள்ளியம்மை. ஆனுல் அழகன் ; சொந்த வீடு இருக்க அந்நிய வீடுகளில் தங்குவதைச் சொல் லாமல் சொல்கிருள்—

"எல்லாக் கிளியும்
இணல் மரத்தில் தங்கிறதாம்
அமிர்த மென்னும் ராச கிளி
அயலூரில் தங்கிறதாம் "

என்று பாடினுள்.

"முன்பும் அவளோடு சிநேகிதமாக இருந்து கொண்டே பேசித் தீர்க்கக்கூடிய சிறு பிரச்சினேயைப் பெரிதாக மதித்து, அந்தப் பேதையின் உள்ளத்தை நோகவிட்டு வேறு விவாகம் செய்துகொண்டோம்" மீண்டும் அவனிடமே வந்திருக்கிறோம். இம்முறை அவள் எப்படி நம்புவாள் என்று அழகனின் மனச் சாட்சி கேட்டது. உறுதியோடு சொல்கிருன்:

"மாறுவேனே கண்டார்
மறுப்பேனடி உன்னுறவை
நாடி நான் வருவேன்—என்ர
சீவனுள்ள மட்டிலேயும் "

ஆயிரம் உறுதிமொழிகள் அளித்தாலும் ஆண் களே எப்படி நம்பமுடியும் ? மலருக்கு மலர்தாவும் வண்டைப்போன்றவர்கள் தானே. இல்லாவிட்டால் முன்பு என்னேப் புறக்கணித்துவிட்டு வேறொருத் தியை மணந்து கொள்வாரா ? அவள் இறந்து போனதும் தானுகவே என்னேத் தேடிவந்திருக்கிருர். இன்னுமொரு அழகான பெண்ணேச் சந்தித்தால் என்னே மறந்து அவளேச் சுற்றத்தொடங்கிவிடுவார். இப்படி பழைய சிந்தனேகளில் ஈடுபட்ட வள்ளி யம்மை கடைக்கண்ணுல் பார்த்தாள் அழகனே. அவன் இன்னமும் மதிலோரம் இவள் பதிலுக்காக எதிர்பார்த்துக்கொண்டு நின்றுன். அப்பொழுது சொல்கிருள் :

"என்ர நெஞ்சிலிருக்கும்
கவலேகளேச் சொன்னவுடன்
ஏழு கடலும் இரையமந்து
கேட்டிருக்கும் "

வள்ளியம்மையின் பேச்சில் உறுதியும், நிதான மும் குறைந்துகொண்டே வருவதைக் கண்ட அழ கன் வேதனையுடன் கேட்கிறான் :

“ கிளியே மொழியே
கிள்ளவெட்டுச் சுண்ணும்பே
அரிய பொழுதே—நான்
ஆருட்ட போயிரட்டும் ”

முட்டிக்கொண்டு நிமிர்வதைவிட, அழகனைப்பற் றிக் கேள்விப்பட்ட வதந்தியை நேரிலே கேட்டுவிட வேண்டுமென்று உள்ளம் தூண்டியதும் சட்டென்று தனது அவாவை வெளியிடுகிறாள் :

“ சாறன் உடுத்த
தங்க மச்சான் என்றிருந்தேன்
கூத்தி, குடிச்சி—நீங்க
கூடாமப் போனதென்ன ”

அவளது கேள்வி அழகனுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியது. தான் முன்பு ஏமாற்றியதற்காக அவளும் தன்னைக் காதலிப்பதுபோல் நடித்து பழிக் குப்பழி வாங்கத் திட்டமிட்டிருக்கிறாளோ ? என்று ஒரு கணம் தோன்றியது. இதனால் எவ்வளவு பகை வந்தாலும் சரி இவளை நாம் கட்டியே தீரவேண்டும் என எண்ணுகிறான். அதை அவளிடம் திட்டவட்ட மாகச் சொல்கிறான்.

“ ஊராங் குருவியிர
உள்ளிருக்கும் பித்தெடுத்து
சேத்தில் மருந்தரைத்து—உன்ர
சீலையிலே பூசிடுவேன் ”

அவனுடைய நோக்கத்தை அறிந்ததும் அவ ளுடைய மனது “ திக் ” என்றது. உண்மையிலே அவனைக் கட்டிக்கொள்ள விருப்பந்தான். ஆனால் இதை அவனது பெற்றார் விரும்ப வேண்டுமே ! தன்னைப் படைத்த ஆண்டவனை நொந்துகொள் கிறாள் :

“ தென்னம் வட்டுக் கிளியெடுத்து
தீன் கொடுத்து நான் வளர்த்தேன்
அங்கே ஒரு தேவடியாள்
அழைத்தெடுத்தாள் ஆண்டவனே ”

அவளைக் கலியாணம் செய்துகொள்ள முன்பா வது தெரிந்திருந்தால் நான் தடுத்திருப்பேனே என்றவள் தொடர்ந்து சொல்லுகிறாள் :

“ காட்டைக் கலைத்துக்
கலைமானை நான் தொடர
வேட்டை நாய் வந்து
விரட்டியதை நானறியேன் ”

வள்ளியம்மை நொந்து திட்டிய சாபம் பலித்துத் தான் தன் மனைவி இறந்து விட்டாளோ ? என்று ஐயுறுகிறான் அழகன். அந்த வேதனையில் :

“ கூடத்தைக் கட்டிக்
குயிலைக் குடியிருத்தி
கூடம் இருக்க
குயில் பறந்த மாயமென்ன ”

மீண்டும் பாடுகிறான் :

“ மாடத்தைக் கட்டி
மயிலைக் குடியிருத்தி
மாடம் இருக்க
மயில் பறந்த மாயமென்ன ”

பொழுதும் பட்டுவிட்டது. மழைக்கால இருள் “ கும் ” மென்றிருந்தது. கார்கால மேகக்கூட்டங்கள் ஆகாயத்தில் முட்டிமோதின. அந்த இடியும் மின்ன லும் அழகனின் உள்ளத்துடன் போட்டி போட்டன போலும். மழை சோவென்று இரைந்து வந்தது. அதைக் கண்ட அழகன் மதிலின் மேலால் ஏறிக் குதித்து அவளுடைய வீட்டுக்கேசென்று விட்டான். நான் கையிலிருந்த குடையை விரித்து மரத்தில் பதுங்கிக் கொண்டேன்.

ஒரு ஆணும், பெண்ணும் தனிமையில் சந்தித் தால் ; அதுவும் இரவு வேளையில் ? இதை நினைக் கவே வள்ளியம்மையின் உடல் கூசியது. கால்கள் கிடு, கிடுத்து ஆடின அந்தக் குளிர் நேரத்தில்கூட உடலில் வியர்வை அரும்பியது. மெதுவாக ஒரு அறையினுள் சென்று தாழிட்டுக்கொண்டாள். இது அழகனுக்கு “ வேப்பங்காயை நறுக்கென்று கடித் தது ” போலிருந்தது. சில நொடிப்பொழுது அவள் செய்கையை எண்ணி வேதனையுற்ற அழகன் சொல் கிறான் :

“ திண்ணையிலே இருக்கவொண்ணு
தெள்ளுக்கடி பொறுக்கவொண்ணு
கதவைத்திற மச்சி—உன்ர
கால்மாட்டில் நானிருக்க ”

அழகன் கதவைத் திற என்று சொன்னதும் வள்ளியம்மையைப் பீதி பற்றிக்கொண்டது. தனிமை யில் என்ன செய்துவிடுவானோ என்று ஏங்குகிறாள்.

கடவுளே அவளைப் பாதுகாக்க வந்தது போல் வயல்வெளிக்குச் சென்றிருந்த பொன்னன் இருமிக் கொண்டே வருகிறான். அவன் வள்ளியம்மையின் அக்காவின் கணவன். ஆள் நடமாட்டத்தைக் காது கொடுத்துக் கேட்ட அழகன் மழையையும் கவனி யாது பின்கதவு வழியாக ஓடுகிறான். ஓடும் சப்தத் தைக் கேட்ட நாய்கள் குலைக்கின்றன.

(26 ம் பக்கம் பார்க்க)

இலங்கை வானொலி வெளியீடு :

# பௌத்தம்

**திரு. கி. இலக்குமணன்**

கௌதமருக்கு உதயமான ஞானம் என்ன ? அவர் கண்ட முடிபுகள் எவை ? இன்று பௌத்த மத தத்துவங்கள் எனக் கருதப்படுவன எவை ? இத் தத்துவங்களுள் எவையென புத்தர் விட்டுச் சென்றவை? எவையெவை பின்னோரால் சேர்க்கப்பட்டவை? என்பனவற்றைத் தெளிவாக விளக்கிக் கொள்ளல் ஓர் எளிதான செயலன்று. பௌத்தத்தை, விளங்குவதற்கு மிகக் கடினமான ஒரு தரிசனமென்றே கூறல் வேண்டும், பௌத்த தத்துவங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தி ஓர் இலகுவான திட்டத்துள் அமைத்துக் காட்டுவது எளிதல்ல. பௌத்தத்தை நேரான ஒரு தனித் தரிசனமாகக் கொள்ளாது பல தரிசனங்களின் பிறப்பிடமாகக் கொள்வதே பொருந்துமெனக் கருதுவோருமுளர்.

உப நிடதங்களை மூலமாகக் கொண்டு பல இந்து தரிசனங்கள் எளலாயின. அவை யாவும் ஒரே கொள்கையுடையனவல்ல. தம்முள் வேறுபாடுடையன. எனினும் ஒவ்வொன்றும் தத்தம் கொள்கையையே உப நிடதங்களில் குறிப்பிடப்படுவது ஆதாரங் காட்டி வாதிக்கின்றன. இத்தரிசனங்களுள் எது கூறுவது உண்மையான உபநிடத்துக் கருத்து என்பதை நிர்ணயிப்பது எத்துணைக் கடினமோ அத்துணைக் கடினந்தான். இன்றைய பௌத்தமதப் பிரிவுகள் கொள்வனவற்றுள் எவையெவை புத்தர் வெளியிட்ட கருத்துக்கள் என வரையறை செய்வதும்.

இதற்குக் காரணங்கள் பல புத்தர் தாம் கண்ட முடிபுகளெதையும் எழுதியாவது சென்றமை முதற் காரணம். அவருக்கேற்பட்ட ஞானோதயமெதுவும் அவர் இறந்தவுடன் கூடி எழுதப்படவில்லை. அவர் மறைந்து பல காலம் கழிந்த பின்புதான் அவர் கருத்துக்கள் நூல் வடிவாயின. நூல் வடிவாக்கினோர் தம் கருத்துக்கள் சிலவற்றையும் சேர்த்திருந்தலும் கூடும். இன்று நமக்குக் கிடைக்கும் பௌத்த நூல்களுள் மிகப் பழயவை வட மொழியின் வழிமொழியாகிய பாலி மொழியில் எழுதப்பட்டவை. அந் நூல்களும் கருத்துக்களை நேராகவோ வெளிப்படையாகவோ புலப்படுத்துவனவல்ல. உரையாடல் மூலமும் உருவக மூலமுமே எழுதப்பட்டுள்ளன. அவ்வுரையாடல்களும் உருவங்களும் குறிப்பனவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதிலுள்ள இடர்ப்பாடு இரண்டாங் காரணம்.

அன்றியும் பௌத்தத்தைக் கூறும் நூல்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தனவல்ல. பௌத்த மத நூற்பரப்போ மிக மிகப் பெரியது. பதினைந்து நூற்றாண்டுகளில் எழுதப்பட்ட பன்னூற்றுக் கணக்கான நூல்களைக் கொண்டது. அந்நூல்கள் எழுதப்பட்ட மொழிகளும் ஒன்றிரண்டல்ல. பாலி, வடமொழியன்றியும் சீன தீபேத்திய, மொங்கோலிய மொழியெனப் பல. இவையும் பௌத்தமத கோட்பாடுகளைத் தெளிவாக அறிவதிலேற்படும் இடர்ப்பாடுகளை மிகுவிப்பன. மற்றுமொரு காரணம் பௌத்த மதத்துட் காணப்படும் பல பிரிவுகளும் உட்பிரிவுகளுமெனலாம், பௌத்தத்திற் பதினெட்டுப் பிரிவுகள் பேசப்படுகின்றன. இவை யனைத்திற்கும் மேலாக காலத்துக் காலமெழும் பிழையான விளக்கங்களைத் திருத்தவல்ல தொடர்ச்சியான மரபொன்று இல்லாமையைக் குறிப்பிடல் வேண்டும்.

இத்தகைய இடர்ப்பாடுகள் பல இருந்த போதிலும் அறிஞர் பலர் இயன்றவரை முயன்றதன் பலனாக அரிய முடிபுகள் பல வெளியாயுள்ளன.

கௌதமர்தான் புத்த மதத்தைத் தாபித்தவர். எனவே பௌத்தத்தின் மூலாதாரக் கொள்கைகள் அனைத்துக்கும் ஆதி காரணர் அவரே—எனப் பலரும் எண்ணுதல் இயல்பு. அன்னோருக்குப் பௌத்த மதத்திற்குள்ள ஆதாரங்கள் கௌதமருக்கு முன்பு பல புத்தர்கள் இருந்தார்கள். அவர்களுள் இருபத்துநால்வர் மிகப் பெயர் பெற்றவர்கள் என்பன போன்ற செய்திகள் சற்று வியப்பினை அளிக்கக் கூடும்.

“ இறந்த காலத் தெண்ணில் புத்தர்களும்
சிறந்தருள் கூர்ந்து திருவாய் மொழிந்தது ”
என்கின்றது மணிமேகலை.

அல்லாமலும் “ தத்துவ விசார முயற்சி எவ்விடத்தும் மிகுதியாகவிருந்த காலத்திலேயே கௌதம புத்தர் அவதரித்தனர். முன்னோர்களின் ஞானமே அவருக்கு மூலதனம் ” என்பன போன்ற கருத்துக்களையும் பலர் வற்புறுத்த முற்படுகின்றனர்.

அவர்கள் அங்ஙனம் செய்தலின் நோக்கம் புத்தர் மிக நூதனமாக எதனையும் கண்டு பிடித்துவிடவில்லையெனத் தாபித்து அவருடைய மகிமையைக் குறைப்பதன்று. புத்தரும் தொடக்கத்தில் ஓர் இந்துவாய்த்தானிருந்தார். அவர் தம் ஞான திருட்டியினுல் அடிப்படையில் எல்லாம் ஒன்று தான் என்று பௌத்தத்துக்கும் இந்து மதத்துக்குமுள்ள வேற்றுமைகளைக் குறைத்து ஒற்றுமைகளைப் பெருக்கிக் காட்டுவதே அன்னோர் நோக்கம். அன்னோருள் மிக முன்னணியில் நிற்பவர் உலகப் புகழ் பெற்ற பேரறிஞர் இராதகிருஷ்ணன் அவர்கள்.

எல்லாவிடத்தும் ஓர் அடிப்படை ஒற்றுமையைக் காணவிழையும் முயற்சியைக் கண்டு இன்று யாரும் வியப்படையக் காரணமில்லை. இது இன்றைய உலக அமைப்பின் விளைவு. பண்டு உலகில் வாழ்ந்தனர். ஓரினத்தோடு இன்னோரினம் கலந்து தொடர்புற வாய்ப்புகள் ஏற்படவில்லை. விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இன்றைய உலக நிலை அதுவன்று. அன்று கிழக்கும் மேற்கும் பல்லாயிர மைல்களால் பிரிந்து நின்றன. இன்று அவை ஒரு சில மணி நேரத்தில் ஒன்று சேரும் நிலையில் உள்ளன. முற்காலத்தில் மத தாபர்களும் மத குருமார்களும் ஒருங்கு வாழவோ ஒருங்கு சேரவோ வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படவில்லை.

ஒரோ வொருகால் ஒருங்கு சேரின், அது பல மதங்களைக் கண்டித்துத் தம்மதமே உண்மையானதென நிலைநாட்டுவதற்கே யாகும். அன்று சர்வ மத சமரசங்காண கூட்டங்கள் கூடுவது வேற்றுமை பேசவன்று; ஒற்றுமை காணவே. உலகில் ஒரு கோடியில் வாழும் மக்களை அடிக்கடி கண்டு கலந்து உரையாடி மகிழ வேண்டிய அவசியமேற்பட்ட இக்காலத்தில் அவர்கள் தம் நல்லுறவு திரப்படும் பொருட்டு தம்முள் அடிப்படை ஒற்றுமைகளைக் காண முயல்வது இயல்பே. உலகப் பெருமக்களுடைய மதக்கோட்பாடுகளுக்கிடையே ஓர் அடிப்படை ஒற்றுமைகளைத் தர்க்க ரீதியாகத் தாபிப்பதில் இராதா கிருஷ்ணன் மாவீரர். உலக சமாதானத்தைத் தேட இதுதான் சிறந்த வழியென்பது அவருடைய கொள்கை.

அவர் எழுதிய நூல்கள் அனைத்தும் இக்கருத்தினை நன்கு வலியுறுத்தும். இங்ஙனம் பல விதத்திலும் வேற்றுமை மலிந்த மேல் நாட்டுக் கொள்கைகளுக்கும் கீழ்நாட்டுக் கொள்கைகளுக்குமிடையிலேயே அடிப்படை ஒற்றுமைகளைத் தாபிக்க வல்ல இராதா கிருஷ்ணனுக்கு இந்திய தத்துவ தரிசனங்களனைத்துக்கும் ஒரு மூல ஒற்றுமையைக் காட்டுவதில் ஒரு வில்லங்கமும் இல்லை. அவர் அதனை மிக எளிதாகச் செய்து முடித்து விடுவார்.

இவ்விதமாக இந்திய தத்துவ தரிசனங்கள் அனைத்துக்கும் மூல ஒற்றுமைகளைக் கண்டு அவற்றைப் பெருப்பித்துக் காட்டும் முயற்சியில் ஈடுபடும் இராதா கிருஷ்ணனும் அவரைப் பின்பற்றுவோரும் வேதாந்தத்தையே தலைமைத் தரிசனமாகக் கொண்டு அதனையே ஏனைய தரிசனங்களை மதிப்பிட ஓர் உரை கல்லாகவும் உபயோகிக்கின்றனர். இந்நிலை முற்றாக ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. இம்முறை ஏனைய தரிசனங்களை உள்ளபடி உணர்வதற்குப் பல சமயங்களில் தடையாக அமைந்து விடுகின்றது எனக் கூடத் தோன்றுகிறது. தரிசனங்களை நன்றாக விளங்குவதற்கு அவற்றை ஒன்றோடொன்று ஒப்பிட்டுக் காட்டுவது ஒரு சிறந்த வழியென்பது மறுக்கத்தக்கதன்று, எனினும் அங்ஙனம் ஒப்பிடும்போது ஒற்றுமைகளைக் குறைத்து வேற்றுமைகளை மிகுவித்துக் காட்டவோ முயலாது நடுநிலை நின்று ஆராய்வதே அவற்றின் தனிச் சிறப்புகளை அறிவதற்கு ஏற்ற வழியாகும்.

மேலும், பௌத்த மதத்துக்கும், இந்து மதங்களுக்கும் ஒற்றுமைகாட்ட முற்பட்ட அறிஞர் பலர் வேதாந்தத்தையே இந்து மதங்கள் எல்லாவற்றுக்கும் சிறந்த பிரதிநிதியாக எடுத்துக் கொண்டு அதற்கும் பௌத்தத்துக்குமுள்ள ஒற்றுமைகளைக் காட்டிவிட்டு அதுவே ஏனைய இந்து தரிசனங்களுக்கும் பௌத்தத்துக்குமுள்ள ஒற்றுமைகளைக் காட்டியதுமாகுமெனக் கருதுகின்றனர். இது தவறு.

பௌராணிகர் கௌதம புத்தரை விஷ்ணுவின் அவதாரமெனக் கருதுகின்றனர். அத்வைதிகளல்லாத வேதாந்திகள் அத்வைதிகளைத் தம் தம் பிரசன்ன பௌத்தர் என்று குறிப்பிடுவதுண்டு. பிரசன்ன என்பதன் பொருள் மறைந்த அல்லது மாறுவேடம் பூண்ட என்பதாகும். இக் கருத்தின்படி அத்வைதிகளும் பௌத்தர் தான் ஆனல் கரந்துறையும் பௌத்தர். இவைகள் பௌத்தத்துக்கும் இந்து மதங்களுக்கும் அடிப்படையில் வேற்றுமை கிடையாது என்போர் குறிப்பிடு முதாரணங்களுட் சில. முக்கியமான ஒற்றுமைகளைப் பின்னர் காண்போம். ஆனல் இங்கு குறிப்பிட்ட உதாரணங்களிலிருந்து தம்முள் வேற்றுமையில்லை எனக் கருதுவோர் இந்துக்களே ஒழியப் பௌத்தர் அல்லர்; அவர்கள் தமக்கும் இந்துக்களுக்கும் அடிப்படை வேற்றுமையில்லை எனக் கருதுவதாகக்கொள்ள இடமில்லையென்பது குறிப்பிடத்தக்கது. இவர்

கள் கருதுவது போலப் பௌத்தத்துக்கும் இந்து மதத்துக்குமிடையில் அடிப்படை வேற்றுமைகள் இல்லாவிடின் புத்தர் ஓர் இந்துவாகவே தம் இளமை கழித்த அவர் அம்மதக் கோட்பாடுகள் தமக்கு உடன்பாடெனக் கருதினராயின் அதனைக் கைவிட்டு அதற்குப் புறம்பாக அதற்கு மாறாக புதுச் சமய மொன்றை ஏற்படுத்தியிருக்க வேண்டாமே !

சிற்சில வேற்றுமைகள் உள்ளனதான். ஆனால் அவை அத்துணை பெரியனவல்ல வெனின், அவர் ஏற்படுத்திய புது மதம் இந்து மதத்தின் ஓர் உட்பிரிவாகுமே யன்றி புறச் சமயமாக வேண்டிய அவசியமில்லையே. இந்து மதப் பிரிவுகளுள் தலையாய ஒன்றாகிய சைவ சித்தாந்தம் ஏனைய இந்திய தரிசனங்களைக் கொள்கை ஒற்றுமை நோக்கி நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றது. அவை அகச் சமயம், அகப்புறச் சமயம், புறச் சமயம், புறப்புறச் சமயம் எனப்படும். தம் மதத்தோடு பெரிதும் வேறுபாடு மதங்களையே அது புறப்புறச் சமயமெனக் கண்டித்து ஒதுக்குகின்றது. சைவ சித்தாந்திகள் பௌத்தத்தை புறச் சமயமாகக் கூடக் கருதுவதில்லை அதனைப் புறப்புறச் சமயங்களுள் ஒன்றாகக் கொள்ளுகின்றனர். அவர்கள் கருத்துப்படி அவர்கள் மத உண்மைகளைப் புறச் சமயத்தவர்களே உணரமாட்டார். உணர மாட்டார் என்பதை ஏற்க மாட்டார் எனக் கொள்ளலாம். புறச் சமயத்தவரே ஏற்கார் எனில் புறப்புறச் சமயமாகிய பௌத்தத்தைப் பற்றிப் பேசவேண்டாம். "புறச்சமயத்தவருக்கு இருளாய் அகச் சமயத்து ஒளியாய்" என்கின்றது சைவ சிந்தாந்த சாத்திரங்களுள் தலையாய ஒன்றாகிய சிவப்பிரகாசம்.

புத்தர் புதிதாகத் தோற்றுவித்த மதக் கோட்பாடுகள் பெரும்பாலும் தம் மதக்கோட்பாடுகளோடு ஒத்தனவேயென அன்று வாழ்ந்த இந்துக்கள் கருதியிருந்தால் அப்புது மத உற்பத்தியைக் கண்டு வெகுண்டுபோர்தொடுக்கத் தொடங்கியிருப்பார்களா? போர் தொடுத்த மட்டில் நில்லாது பௌத்த மதத்தின் பிறப்பிடமாகிய இந்திய உப கண்டத்திலே ஒரு சிறு பகுதியிற்கூட அதனை ஒதுங்க விடாது அடியோடு அகற்றியிருப்பார்களா ? புத்தர் தோன்றுவித்த புதிய மதத்துக்கும் இந்துக்களுடைய பழைய மதத்திற்கும் அடிப்படைக் கொள்கைகளில் அதிக வேற்றுமையில்லை யென்பதை அக்காலப் பௌத்தரும் இந்துக்களும் உணரத் தவறியமைதான் அன்றைய பூசல்களுக்குக் காரணமெனக் கூறலாமா ?

இந்தியாவில் பௌத்த மதத்தை இந்துக்கள் அழித்தார்கள் என்பது தவறு. அங்கு அது தானாகவே அழிந்தது—என்பதுதான் உண்மையென அறிஞர் பலர் இன்று கருதுகின்றனர். அதனைப் பின்னர் ஆராய்வோம்.

புத்தர் தோற்றுவித்த புதிய மதத்துக்கும் இந்துக்களுடைய பழைய மதத்துக்கும் அடிப்படைக் கொள்கைகளில் அதிக வேற்றுமை யில்லையென்பதை அக்காலப் பௌத்தரும் இந்துக்களும் உணரத் தவறியமைதான் அன்றைய பூசல்களுக்குக் காரணமெனக் கூறலாமா ? புத்தர் காலத்தும் வாழ்ந்த மக்கள் அறியத் தவறிய உண்மையைப் பன்னூற்றுக் கணக்கான வருடங்களுக்குப் பின் வாழும் நாம் உணர்ந்து விட்டோம் எனக் கொள்வது பொருந்துமா ! இவை ஆராயத் தக்கன.

பௌத்த மத இந்து மத அடிப்படை ஒற்றுமைகளை தலைநாட்ட விழைவோர் "புத்தருக்கு, முன்னோர்களின் ஞானமே மூலதனம்" எனக் குறிப்பிடுவதை முன்னர் குறிப்பிட்டோம். புத்தர் உபநிடதக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டவர் என்பது தான் அன்னோர் கருத்து. ஆனால் புத்தர் தனது கொள்கைகளுக்கு உபநிடத்தையோ அல்லது தனக்கு முற்பட்ட எந்த ஆசிரியரையோ காரணமாக ஓரிடத்திலாவது குறிப்பிடவில்லை. தான் ஒரு புது மரபை உண்டுபடுத்துவதாகவும் எவராலும் அறியப்படாத ஒரு புது மார்க்கத்தைத் தான் திறப்பதாகவுமே அவர் எப்பொழுதும் கூறினர் "பிரம்ம ஜாலா" "சாமஞ்ஞ பல சுத்தாஸ்" ஆகிய நூல்களிலும் பிறவிடங்களிலும் அக்காலத்தில் வழங்கிய தத்துவ ஞானக் கொள்கைகள் அனைத்தும் ஆராயப்பட்டு அவற்றுள் கொள்ளத்தக்கது எதுவுமில்லையென, யாவும் தள்ளப்பட்டமையையே காண்கின்றோம்.

மேலே, ஒற்றுமை வேற்றுமையென்று பொதுவாகக் குறிப்பிட்டுக்கொண்டு வந்தோமே யொழிய அவை எவையென இதுவரை குறிப்பிடவில்லை. இனி அவற்றை எடுத்து ஆராய்வோம்.

பௌத்தத்தை முக்கிய சில அம்சங்களிலாவது இந்துமதங்களோடு ஒப்பிடுவது ஒரு விதத்தில்அதனை விளக்குவதற்குச் சுலபமான வழியாகும்.

தத்துவ ஞானமெதும் (பிரபஞ்சத்தை அறிவதற்கு அநுட்டிக்கும் வழிகள்) பிரபஞ்சத்தைப் பற்றியும் அதன் மூலம் பற்றியு முள்ள கொள்கை ETHICS (ஒழுக்க முறைகள்) என முத்திறப்பட்டு நிற்கும். இவை மூன்றும் ஒன்றுக்கொன்று மிக நெருங்கிய தொடர்புடையன ஒன்றுக் கேற்பவே ஏனைய இரண்டும் அமையும். ஒரு தரிசனம் தத்துவஞானத்தை அடையக் கொள்ளும் வழிகளை அதாவது பிரமாணங்

(27 ம் டக்கம் பார்க்க)

# பொங்கும் இன்பம் எங்கும் தங்குக

(திரு. செ. வேலாயுதபிள்ளை)

உழுதுண் மாந்தர் மழைநோக்கி
உவந்தன் பாக வயலுழுதங்
குணவுக் காகும் நென்முதலாம்
உயர்தா னியங்கள் மிகவிளைத்துத்
தொழுதுண் மாந்தர் துயரோட்டத்
தோட்டந் தோறும் வாழைகளும்
தோடை வருக்கை மாமுதலாந்
துன்னும் கனிகள் தருமரமும்
பழுதில் வள்ளிக் கிழங்கினமும்
பாகல் முதலாம் காய்வகையும்
பாங்காய் வளர்க்கும் தமிழ்நாட்டிற்
பரிதிச் செல்வன் ஒளிசிறக்கும்
பொழுதில் இன்பப் புனலாடிப்
பொற்பார் மனையிற் கோல மிட்டுப்
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பம் தங்கிடுமே (1)

காலை யெழுந்து நீராடிக்
கடவுள் வணக்கம் செய்ததற்பின்
காமர் மனையின் முன்றிலினைக்
கையால் மெழுகித் தூய்தாக்கிக்
கோலம் எழுதிச் சித்திரித்துக்
கும்பம் வைத்துப் பூச்சூடிக்
குத்து விளக்கும் கொளுத்திவைத்துக்
கோடார் அடுப்பிற் புதுப்பானை
பாலும் நீரும் பெய்தேற்றிப்
பச்சை மஞ்சள் இஞ்சியிலை
பாங்காய்ச் சுற்றித் தீமூட்டிப்
பண்கள் பாடிப் பதுமத்தாள்
போலும் இல்லத் தலைவியர்தைப்
பொங்கல் புரிவர் மனைதோறும்
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பம் தங்கிடுமே (2)

வயலில் விளைந்த செந்நெல்லை
வாகாய்க் குத்தி யரிசியினை
வாழ்த்திப் பானை தனிலிட்டு
வளமாய்ப் பொங்கி யதுதன்னை
வெயிலிற் சூரியான் முதலுண்ண
வெல்லங் கூட்டி நிவேதித்து
விதமாய்ப் பழமும் வெற்றிலையும்
விரும்பிப் படைத்துக் கும்பிட்டும்
அயலிற் சிறுவர் வெடிசுட்டே
ஆர்த்துக் களிக்க ஆங்கவர்தம்
ஆட்டத் துண்டாம் சிறுபூசல்
அன்பாய்த் தீர்த்தும் மகிழ்பூக்கும்
புயலிற் பொலியுங் குழன்மாதர்
பொங்கிக் களிப்பர் மனைதோறும்
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பம் தங்கிடுமே (3)

வாழும் நெறியைப் பாழாக்கி
வஞ்சப் பகைமைத் தீமூட்டி
வாய்கா வாமல் வஞ்சினமும்
வறிதே பிதற்றும் வன்கண்ணர்
சூழும் கொடிய சூழ்ச்சியெலாம்
சுட்டுப் பொசுக்கிச் சுதந்திரமாச்
சுடரும் வானச் சோதியெனச்
சுவைகூர் தமிழ்த்தாய் துலங்கற்கும்
ஈழம் வாழும் தமிழரினம்
இருளில் அழுந்தா துயர்தற்கும்
இன்னல் மலைபோல் வந்தாலும்
இறையும் கலங்கா தெதிரேற்றுப்
போழும் வீரம் பெறுதற்கும்
பொங்கிக் களிப்போம் தைநாளில்
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பம் தங்கிடுமே (4)

சங்கம் இருந்த தமிழ்பொங்கச்
சைவம் பொங்கத் தரணியெலாம்
சாந்தம் பொங்கச் சன்மார்க்கம்
தழைத்துப் பொங்கத் தன்னரசின்
அங்கம் பொங்க அறம் பொங்க
ஆளும் நீதித் திறம்பொங்க
ஆண்மை பொங்க அருள்பொங்க
அழகுக் கலைகள் அவைபொங்கத்

திங்கள் மூன்று மழைபொங்கத்
திருவும் வளனும் உடன்பொங்கத்
தீம்பால் பொழியும் கறவையினம்
செழித்துப் பொங்கச் சிவம்பொங்கப்

பொங்கும் வாழ்வுக் கறிகுறியாய்
பொங்கிக் களிப்போம் தைநாளில்
பொங்கல் அயர உலகெங்கும்
பொங்கும் இன்பம் தங்கிடுமே (5)

---

# செங்கல்-ஓட்டுத் தொழிற்சாலைகள்

மலைநாட்டுப் பகுதிக்குத் தேவைப்படும் செங்கல், ஓடு முதலானவற்றின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கடுகண்ணவையில் உள்ள இலுக்வத்தை என்னும் இடத்தில் செங்கல், ஓட்டுத் தொழிற்சாலை நிறுவுதற்கு வேண்டிய பூர்வாங்க நடவடிக்கைகள் யாவும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

இப் புதிய தொழிற்சாலை குறித்த ஒரு தரத்தில் செங்கல்லையும் ஓட்டையும் உற்பத்தி செய்யும். குறைந்த ரக செங்கல், ஓடுகள் இலகுவில் உடைந்து விடுகின்றன. எனினும் இயந்திரங்கள் மூலம் இவற்றை உற்பத்தி செய்யவிருப்பதனால் இவற்றின் உடைவுத் தன்மை கணிசமாகக் குறையும். இதன் விளைவாக கட்டிடத்துக்குச் செலவாகும் தொகை குறையலாம்.

இப் புதிய கைத்தொழில் 200 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் எனவும், வருடாந்தம் அந்நிய செலாவணியில் 22 லட்சம் ரூபா மிகுதி ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனம் ஒன்று சேர்ந்து, செங்கல், ஓடு உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ் உருவான முதல் தொழிற்சாலை இதுவே யாகும். 1958 இல் 1,59,50,000 ஓடுகள் ரூ. 36,81,000 பெறுமதிக்கு இறக்குமதி செய்யப்பட்டன. இந்த இறக்குமதியை எதிர்காலத்தில் தவிர்க்கும் நோக்கத்துடனேயே இத்தொழிற்சாலை நிறுவப்பட்டது.

அதிக அளவு ஓடுகள் இறக்குமதி செய்யப்பட்டு வருவதால், அவை பெருமளவு உபயோகிக்கப்படும் வட்டாரங்களில் பல ஓட்டுத் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதனால், கட்டிடச் செலவு பெரிதும் குறையலாம்.

பங்கதேனியா என்னும் இடத்தில் ஓடு உற்பத்திக்கு உகந்த களிமண் காணப்படுவதால் அங்கு இரண்டாவது ஓட்டுத் தொழிற்சாலையை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. புத்தளத்தில் நிறுவப்படவிருக்கும் இரண்டாவது சீமந்துத் தொழிற்சாலைக்கு வேண்டிய ஓடுகளையும், செங்கல்லையும் விநியோகிக்கும் அனுகூலம் உடனடியாகப் பெறப்படும். அத்துடன் இரண்டாவது சீமந்துத் தொழிற்சாலை நிறுவப்பட்டதும் அதிக வீடுகளையும் மக்கள் கட்டத் தொடங்குவர். இதனால் ஓட்டுக்கும் செங்கல்லுக்கும் உள்ள கிராக்கி அதிகரிக்கும்; அப்போது பங்கதேனிய செங்கல், ஓட்டுத் தொழிற்சாலைக்கும் நல்ல வர்த்தக வாய்ப்பு ஏற்படும்.

இலுக்வத்தையில் உள்ள தொழிற்சாலை வருடம் ஒன்றுக்கு பத்து லட்சம் ஓடுகளையும், ஆறு லட்சம் செங்கற்களையும் உற்பத்தி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலைகளுக்கு வேண்டிய இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவற்றுக்கான ஓடர்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டுவிட்டன. தொழிற்சாலைக் கட்டிட வேலை 1960, ஜனவரியில் ஆரம்பிக்கப்படும். தேசீய சிறு கைத்தொழில் கூட்டுத் தாபனம் இன்னும் மூன்று தொழிற்சாலைகளை நிறுவத் துரித நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இவற்றில் ஒன்று தென்பிராந்தியங்களின் செங்கல், ஓட்டுத் தேவைகளைச் சமாளிப்பதற்காக காலி—மாத்தறை மாவட்டத்திலும், வடமத்திய பகுதிகளுக்காக அனுராதபுரத்தில் மற்றொன்றும், வடகிழக்கு, வடக்குப் பகுதிகளுக்காக திரிகோணமலையில் இன்னும் ஒன்றும் நிறுவப்படவிருக்கின்றன.

இத்தொழிற்சாலைகள் யாவும் இயங்கத் தொடங்கினால் வருடாந்தம் சுமார் ஒரு கோடி இருபது லட்சம் ஓடுகள் உற்பத்தி செய்யப்படலாம். இவ் வேலைத் திட்டம் 1962 ஆம் ஆண்டில் பூர்த்தியாகையில், ஓடு இறக்குமதி கணிசமாகக் குறையலாம்.

இக் கூட்டுத் தாபனத்துக்கு மொத்தம் 36 லட்சம் ரூபா கொடுக்கப்பட்டுள்ளது. இத்தொகையைச் செலவிடுவதனால் முடிவில் சுமார் 1,500 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

# நமது கிராம வாழ்க்கை

திரு. கா. சீ. வேங்கடரமணி

நம் இந்தியா தேசத்தின் மேன்மைக்கும் பெருமைக்கும், எல்லாச் சிறப்பும் வளமும் பொருந்திய, அதன் குக்கிராம வாழ்க்கையே சிறந்த காரணமென்பதைப் பல பெரியோர் உணர்ந்து கூறியிருக்கின்றனர். கிராம வாழ்க்கை என்பது இந்தியாவில் அநாதி காலமாக நடந்து வருவது. இப்பொழுது இக்கால நாகரிகத்திற்கிசைய நகரங்களிலிருந்து ஓயாமலொழியாமல் உழைத்துச் சலித்தவர்களுக்குக் கிராம வாழ்க்கையானது சுவர்க்கம்போல் இன்பந்தரத் தக்கதாயிருக்கிறது. ஆதலால், கல்விக் கிளர்ச்சி கொண்டு, நகர வாழ்க்கை நன்மை தீமைகளையும் கிராம வாழ்க்கைக் குறைவினுல் ஏற்பட்டுள்ள குறைகளையும் எல்லோரும் சீர்தூக்கியறிகிற இக்காலத்தில் நம் நாட்டில், நகரங்களிலெங்கும் "ஊருக்குத் திரும்புவோம்" என்னும் குரல் கேட்கிறது. ஆம்! அக் குரல் இன்றியமையாததே; நம் பாரத நாடானது பழைய வளத்தை யடைந்து அதில் தேனும் பாலும் பெருக்கெடுத்தோட வேண்டுமாயின், நம் கிராமச் சீர்திருத்தமே அதற்கு ஆதாரமாகும். கிராமச் சீர்திருத்தம் இல்லாவிடின் நம் நாட்டில் எந்தப் பெரிய காரியத்தையும் சாதிக்க இயலாது. உலக நன்மைக்காக நாமும் உழைக்க வேண்டுமென்ருல், நம்மைப் போஷிக்கும் கிராமங்களின் நிலைமையை முன்னதாக ஒழுங்குபடுத்தி உயர்த்தியே தீரவேண்டும்.

முற்காலத்தில் கிராம வாழ்க்கைதான் நமது நாகரிகத்தைச் சிதறவொட்டாமல் சுத்தமாகச் சேர்த்து வைத்திருந்தது. அந்நியர் படையெடுப்பு, ஆட்சி முதலிய பெருங் காற்ருற்கூட நம் திருந்திய கொள்கைகளாகிய தீபங்கள் அணையா வண்ணம் இன்றும் அதுதான் பாதுகாத்து வருகிறது. அப்பெருங்காற்று நமது கிராம வாழ்க்கையை இன்னும் முழுதும் சிதைத்து விடவில்லை; தொன்று தொட்டுவரும் நமது முன்னேற்றத்தையும் முறித்துவிடவில்லை. இடையே உண்டாகும் சிற்சில கேடுகளையுங்கூட, கிராம வாழ்க்கையிலிருந்து உண்டாகும் பெரு நன்மைகளால் மாற்றி நமது நாட்டின் ஜிவதாதுக்களை விருத்தி செய்து வருகிருேம்.

நமது நாட்டின் உயர்நிலை, மேல்நாடுகளிற்போல ஒரு நகரத்திலே முடிச்சிட்டு வைக்கப்படவில்லை. அதை நாம் பலவாகப் பகுத்து ஒவ்வொரு கிராமத்திலும் உட்புகுத்திப் பாதுகாத்து வந்தோம். அதனுலேயே நமது கிராம வாழ்க்கை இன்னும் சிதையாமல் மேன்மையுடன் நிலைத்திருக்கிறது. சுவாசப் பையினுள்ள சிறு கண்ணறைகள் பிராண வாயுவை உட்கொண்டு உடலினுள்ள கெட்ட ரத்தத்தைச் சுத்தி செய்வதுபோல், ஆயிரக்கணக்கான நம் குக்கிராமங்கள் அவ்வப்போது நம் நாட்டின் கேடுகளை நீக்கி நமது வாழ்வை மேன்மைப்படுத்தி வந்துள்ளன. எப்பொழுதும் அலை இயங்கும் கடலில், பவளக் கொடிகள் அவ்வலைகளாற் கேடுருமல் மேன்மேலும் படர்ந்து நிலைத்திருப்பதுபோல நம் கிராமங்களும் பல வகைக் கேடுகளுக்கும் தப்பி நிலைத்து அழியாத நல்வளத்தை நம் நாட்டுக்கு அளித்து வந்துள்ளன.

கிராமங்களின் இத்தகைய சிறப்புக்குக் காரணமென்ன, அவற்றுக்கு ஏன் இவ்வளவு சக்தி என்பவற்றை ஆராய்வோம். மக்கள் அபிவிருத்தியடைவதற்கு அவர்கள் கூடியும் தனித்தும் வாழ வேண்டியிருக்கிறது. சமூக வாழ்வினுல் அபிவிருத்திக்கு ஆதாரமான அநுபவங்கள் கிடைக்கின்றன. ஓடித் திரிந்து மந்தையில் மேய்ந்து உண்ட உணவை அசைபோட்டுப் பயன்படுத்துவதுபோல, தனிமை வாழ்வினுல் சமூக வாழ்வினுண்டாகும் அனுபவங்களையெல்லாம் பழக்கத்திற் கொண்டு வந்து அநுஷ்டிக்கலாம். ஆகவே, இவ்விருவகை வாழ்க்கைகளும் இன்றியமையாதனவே. ஆனுல், இவற்றிற்கு ஓர் அளவு வேண்டும். தனிமையான வாழ்க்கையால் நாட்டு நடப்பொன்றும் தெரியாமல் கிணற்றுத் தவளை போலாகிவிட நேரும். எப்பொழுதும் கூட்டத்திலேயே இருந்து வந்தாலும் ஆற்று வெள்ளத்தில் மிதக்கும் கட்டையைப்போல இழுத்த வழியெல்லாம் போகவேண்டியதாகிவிடும். ஆதலால் இவ்விரு வகையும் கலந்ததொரு வாழ்க்கை நமக்கு வேண்டியதாகிறது. கிராம வாழ்க்கைதான் இவ்விருவகை வாழ்வையும் சரிவர இணைத்துப் பக்குவப்படுத்தி அமைத்து நமக்கு மேன்மை தருவதாகும். ஆதலால்தான் கிராம வாழ்க்கை சிறந்த சக்தியுடையதாகிறது. எனவே கிராமங்களின் நேர்மைக்குரிய சாதனங்கள் எவையென்று நாம் தேடுவது மிகவும் அவசியம்.

நம் கிராமங்களின் சீர்திருத்தம் நம் நாட்டுக்கு மட்டுமன்றி உலகத்திற்கே நன்மை தருவதாகும்.

ஏனெனின், இந்தியாவிலுள்ள கிராமவாசிகளின் தொகை உலகமுழுவதுமுள்ள ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்காகும். அதாவது சுமார் 30 கோடி ஜனங்கள் இந்திய கிராமவாசிகள். இவ்வாறு உலகின் ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கு ஒரே நாட்டிலிருந்து மேன்மையுறுவது ஒரு பெருஞ் சிறப்பன்றோ ? இப்பொழுது தேச பக்திக் கிளர்ச்சி மிகுந்துள்ள நம் பாரத நாட்டில் பெரும் பாலோர் இடையே கைவிட்ட கிராம வாழ்க்கையிலும் அதன் சீர்திருத்தத்திலும் ஊக்கங்கொண்டிருப் பது நாட்டிற்கு நல்ல காலத்திற்கறிகுறிதான். நோய் வந்தால்தானே நோயற்ற வாழ்வின் பெருமை புலப்படும் ? நிழலின் அருமை வெயிலில் போனு ல்தானே தெரியும் ? பழைய வளப்பமான முறை யைப் பின்பற்றி வருவதாற் சிறந்து விளங்கும் கிராமங்களை இப்பொழுது பார்ப்பதரிதாகிவிட்டது. இடையே சுமார் ஐம்பது வருஷத்திற்குள் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், குளந் தூர்ந்து குட்டையாகி அதுவும் வறண்டு போனுலும் நீர் இருந்த இடத்தின் அடையாளங்கள் காணப்படு வதுபோல, கிராமங்களின் பழைய சின்னங்கள் இன் னும் சிறிதளவு சிதையாது காணப்படுகின்றன.

ஊர்ப்புறமாக ஓடும் ஆற்றையும் கால்வாயையும் ஏரியையும் பழைய சாலையையும் எல்லையாகக் கொண்டு, தோப்பு, துரவு, குளம், குட்டை, வயல் வெளிகளுடன் திகழ்வது சிறந்த கிராமம். தோப் பின் நடுவில் அக்கிரகாரமும், அதன் ஒரு புறத்தில் ஆலயமும், அதனை அடுத்துக் குளமும், புறத்தே சூழச் சேரிகளும், தொழிலாளர்கள் வீடுகளும் அமை யப் பெற்று விளங்கும் கிராமத்தின் சிறப்பை என் னென்று உரைப்பது ! "கோவிலில்லா ஊரிற் குடி யிருக்க வேண்டாம்" என்னும் கொள்கையானது நமது தமிழ் நாட்டினரின் மனத்தில் ஆழமாக வேரூன்றியிருக்கிறது. ஆகவே கிராமத்திற்குக் கோவில் ஒரு குறித்த அங்கமாகக் கருதப்பட்டு வருகிறது. அது கிராமத்தின் உயர்வு அதன் நீர் நிலவளங்களினுல் மட்டுமன்று ; அது கிராமவாசி களின் குணுகுணங்களையும் இயற்கையையும் பொறுத் துத்தான் இருக்கிறது.

ஒரு நல்ல கிராமமானது தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தானே உற்பத்தி செய்து கொள்ளக் கூடியது ; பிற அவசியமான தேவை களையும் தானே பூர்த்தி செய்து கொள்ளக் கூடியது நெல்லும், நவதானியங்களும், பயிருக்கும் பாலுக் கும் வேண்டிய கால்நடைகளும் குறைவின்றி உடை யது. மேல்நாட்டு நாகரிகத்தின் உல்லாச வாழ் வுக்கேற்ற ஆடம்பரப் பொருள்களைச் செய்ய இய லாதவராயினும் சாதாரணமான தேவைகளைத் தடையின்றி நிரப்பக் கூடிய தொழிலாளர்கள் பலர் அங்கே இருப்பார்கள். தச்சன், கொல்லன், கொற்றன், வண்ணுன், அம்பட்டன், சேணியன், தட்டான் ஆகிய அத்தொழிலாளர்கள் அனைவரும் மனமொத்து உழைப்பார்கள். அவர்களுக்கெல் லாம் சம்பளம் மானியமாய் விடப்பட்ட நிலமே. அந்நிலம் விளைந்தால் தான் அவர்களுக்குச் சாப் பாடு. ஆதலால் மிராசுதார்களுக்குள்ள பொறுப்பு அத்தொழிலாளிகளுக்கும் உள்ளதாகிறது. ஒரு கிராமவாசி எந்தத் தொழில் செய்து வந்தாலும் அது கடைசியில் விவசாயத்தில் போய்த்தான் நிற் கும். மேற்கூறிய பல்வேறு தொழிலாளிகளையும் ஒன்று படுத்துவது கோவில் கைங்கரியமாகும். அஃது எல்லாருடைய வேலைக்கும் பொதுவான ஓர் ஊக் கத்தை உண்டாக்குகிறது.

கிராம வாழ்க்கையின் மேன்மைக்கு முக்கிய கார ணம், பண்ணையார்களுக்கும் பண்ணையாட்களுக் கும் உள்ள அந்நியோந்நிய பாவமே. அவர்கள் எப்பொழுதும் நகமும் சதையும்போற் கலந்து காரி யங்களில் ஈடுபட்டு உழைப்பார்கள். ஆட்களுக்கும் தொழிலாளிகளுக்கும் தொன்றுதொட்டு வந்த முறையை அநுசரித்து அவரவர் வேலைக்கும் தேவைக் கும் ஏற்பக் கூலிகள் வரையறுக்கப்பட்டிருந்தத ஞல் மனஸ்தாபங்களுக்கு இடமில்லை.

பழைய முறையிலுள்ள கிராமங்களில் மேற்கூறிய படி ஒவ்வொரு தொழிலாளிக்கும் விடப்படும் மானிய நிலங்கள் சாதாரணமாக அவனவன் குடும் பத்தை ஆதரிக்கப்போதுமானவையாக இருக்கும். கிராம வாழ்க்கையில் சுகமாய் வாழ்வதற்குத் தேவைகள் அதிகம் வேண்டுவதில்லையன்றோ ? இரண்டு தென்னை, நாலு வாழை சில ஆடுமாடுகள், மூன்று ஏக்கர் நிலம் ஆகிய இவை ஒருவனுக்கு இருப்பின் அவன் பாடு ராயபோகந்தான் ; தொழி லாளிகளுக்கு இந்த மானிய வரும்படி தவிர, அதி கப்படியாக அவர் செய்யும் சில வேலைகளுக்குக் குடியிருக்க மனைக்கட்டும் உண்டு. சுருங்கச் சொல் லின், நகரவாசிகள் போல ஜேபியில் போட்டுக் குலுக்கி உல்லாசமாய்க் கண்டவற்றிலெல்லாம் வாரி யிறைக்க வேண்டிய காசு அவர்களுக்கு இல்லா விடினும், சாதாரணமாக ஒருவன் சௌக்கிய மாக வாழ்வதற்கு வேண்டிய எல்லாச் சௌகரி யங்களும் கிராமங்களில் உண்டு. நிலம் நன்கு விளைந்தாலன்றிக் கிராமவாசிகளுக்கு ஜீவனம் நடைபெருதாகையால், நிலச் சாகுபடி விஷயத்தில் அனைவரும் உரிய காலங்களில் ஒத்துழைத்தே தீர வேண்டும். அவ்வாறு உழைப்பதில் நகரவாசி

களைப் போலக் கிராமவாசிகளுக்கு அடிக்கடி சளைப்பு ஏற்படுவதில்லை. அவர்கள் நெற்றிவேர்வை நிலத்திற் சொட்ட நாள் முழுவதும் உழைத்தாலும் "அதனால்தானே நமக்கு உணவு?" என்ற உணர்ச்சி அந்தக் கஷ்டத்தை மாற்றிவிடும். கேவலம் காசுக் கூலிக்காக பிறருக்கு உழைத்தாலன்றோ மன வெறுப்புக்கு இடம் இருக்கப் போகிறது. ஆகையால், கிராமத்தைப் பொறுத்த வயல், வாய்க்கால் வெட்டு, எருவடித்தல், தண்ணீர் பாய்ச்சுதல், வடிகட்டுதல், குளம் வெட்டுதல், கோவில் கட்டுதல் முதலிய எல்லாப் பொதுக் காரியங்களிலும் அனைவரும் மனமொத்துச் சிரத்தையுடன் சிறியதையும் பெரியதாக மதித்துச் சிறக்க நடத்துவார்கள்.

ஒரு கிராமத்தில் இத்தனை பேருக்கும் நிலம் தேடிக்கொடுக்க வேண்டியிருக்கிறபடியால், ஒருவருக்கும் பிறரைத் துன்புறுத்தி அடக்கியாளத் தக்க பெருமித முண்டாக்கும்படியான அதிக நிலங்கள் கிடைப்பதில்லை. இதனால் ஒரு நல்ல, பழைய முறையிலுள்ள சிறந்த கிராமத்தில், அநேகமாக எல்லோருக்கும் நிலம் சமபாகமாய்த்தான் இருக்கும்.

இனி, கிராம சமுதாய நடவடிக்கைகளும் வயல் வெளி வேலைகளும் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைப் பார்ப்போம். தொழிலாளிகளைப்போலவே பண்ணையாட்களுக்கும் மானியமும் குடியிருப்பு வீடும் உண்டு. இவை தவிர, அறுப்புக் காலத்தில் கண்டு முதலில் கலத்திற்கு இவ்வளவென்று குறிப்பிட்ட பங்கு ஒன்றும் பரம்பரைப் பண்ணையாட்களுக்கு உண்டு. தீபாவளி, பொங்கல் சமயங்களில் ஒரு ஜோடி வேஷ்டியும் படியும் உண்டு. வாரச் சாகுபடி செய்பவர்கள் அந்த அந்த நிலத்தின் தரத்துக் கேற்றவாறு பழைமையாக விதிக்கப்பட்டுள்ள வீதப்படி நெல்லைப் பெறுவார்கள். மிராசுதாரர்களும் பண்ணையாட்களின் வீட்டுச் சுக துக்கங்களில் பொறுப்புடையவர்களாய்ச் சமயங்களில் உதவிபுரியக் கடமைப்பட்டிருந்தார்கள்.

ஒவ்வொரு கிராமத்திலும் "தலையாரி", "நீராணிக்கக்காரன்" என்ற சில்லறைச் சிப்பந்திகள் உண்டு. இவருள் தலையாரியின் வேலை கிராம ஆட்சிக்கு மிகவும் முக்கியமானது. கிராமக்காவல் அவன் பொறுப்பு. கிராமத்தின் உயர்நிலை அவன் கையில்தான். ஊர்க்காவல் தவிர, கிராமப் பொது வேலைகளுக்கு ஆட்களைச் சேர்த்து அவற்றைக் கவனிப்பதும் அவன் பொறுப்பு. அவனுக்கும் முதல் தரமான மானியம் உண்டு. நீராணிக்கக்காரனுக்கும் மானியந் தான் அவன் வேலை, ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல்லோருடைய வயலுக்கும் ஒன்றுபோல நீர்ப்பாசனத்தைக் கவனிக்க வேண்டியது. கண்டுமுதல் காலத்தில் நீராணிக்கக்காரனுக்கு ஒவ்வொரு பண்ணையிலும் களத்திலும் ஒரு கட்டு நெற்கதிர் பங்கு உண்டு.

இவர்களையெல்லாம் அடக்கியாண்டு கிராம நிர்வாகத்தைச் சரிவர நடத்துவதற்கு, வெளி நாடுகளிலும் பெயர் பெற்றதாகிய பஞ்சாயத்து முறை ஏற்பட்டுள்ளது. "பஞ்சாயத்து" என்பது ஐந்து பேர் கொண்டதோர் ஆலோசனைச் சபையின் தலைவர் "முதல் பஞ்சாயத்து" அல்லது "நாட்டாண்மைக்காரர்" எனப்படுவார். இப் பதவி வம்ச பரம்பரையாக வரும். பிரிட்டிஷ் அரசாங்க முறைகள் பரவுமுன், நம் தமிழ் நாட்டில் அரசர்கள் முடிதரித்துச் செங்கோல் பிடித்துச் சிங்காசனம் ஏறிப் பேருக்கு அரசுபுரிந்து வந்தாலும், இப் பஞ்சாயத்துச் சபைகளே ஆட்சி முழுவதையும் தாமே நடத்திவந்தன.

பஞ்சாயத்து, சம்பளமில்லாத கௌரவ வேலையாதலால் இதில் இருப்பவர்கள் பெரும்பாலும் நல்ல நிலையிலுள்ளவர்களாகக் கிராமாபிவிருத்தியில் எப்பொழுதும் நோக்கமுடையவர்களாக இருப்பார்கள். அதிலும் பஞ்சாயத்துத் தலைவர் பரம்பரைப் பிரபுவாய்க் கல்வியறிவும், சாந்தம், பொது நோக்கம், தரும சிந்தனை முதலிய குணங்களும் உடையவராகவே இருப்பது வழக்கம். ஆதலால் கிராமத்தில் அவர் இட்டது சட்டமாக இருக்கும். நம் நாட்டில் இது வரை குணத்திற்கே பெருமை அதிகமன்றிப் பணத்திற்கன்று. ஒருவருடைய சாமர்த்தியத்துக்கும், அஞ்சாது தொழில் புரியும் ஆற்றலுக்குமாகப் பளபளவென்று மின்னும் வெள்ளி ரூபாய்களைப் பரிசாக அளிப்பதில்லை. வணக்கம், ஒடுக்கம், சாந்தம், சீலம் இவற்றிற்குத்தான் கௌரவம். ஆனால் இம் முறையும், மேல் நாட்டு நாகரிகம் முற்றிய இந்த இருபதாம் நூற்றாண்டில் மாறி வருகிறது.

நாட்டாண்மைக்காரருக்கு எல்லா அதிகாரமும் இருந்தாலும், நடவடிக்கையில் அவர்கள் பண்டைக் கால முறைகளையும் சுற்றியுள்ள பலரையும் அநுசரித்தே போக வேண்டும். மலைச்சரிவுகளிலிருந்து ஒரு வழியின்றிப் பல முகமாகப் புரண்டோடிவரும் மழை நீர், சமபூமியை அடைந்ததும் ஒரு வழிப்பட்டு "ஆறு" என்ற பெயர் பெற்று வரம்பு கடவாமல் ஓடுவதுபோல நமது நாட்டில் ஒரு நெறி நில்லாத மனித வாழ்க்கையைத் தரும

பரிபாலனமென்னும் ஆற்றின் கரைகொண்டு ஒழுங்கு படுத்தியிருக்கிறார்கள். அந்த ஆறு வரம்பு கடக்க முடியாதல்லவா ? ஆதலால் தருமத்தை விட்டு விலகிக் கிராமப் பஞ்சாயத்தும் நடக்க முடியாது.

சாகுபடிக் காலத்தில் கிராமத்தின் நிலங்களைச் செவ்வை செய்யக் கிராமத்தாரெல்லாருடைய ஊக்கமும் ஒத்த உழைப்பும் வேண்டும். ஆதலால், ஒரு நல்ல கிராமத்தில் எல்லாரும் ஒற்றுமை யுடையவர்களாகவே இருப்பார்கள். ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையும், தரும சிந்தனையும், ஒற்றுமையுமே கிராமவாசிகளுக்கு அழகு. அவர்கள் கணக்கில்லாமல் கண்ட புத்தகங்களையெல்லாம் வாசியாவிட்டாலும், வரிசை வரிசையாக மேடைகளில் பலவாறான பிரசங்கங்களைக் கேளாவிட்டாலும் அவர்களுடைய பொது அறிவின் வளர்ச்சிக்கும், வாழ்க்கையின் தேர்ச்சிக்கும் சிறிதும் குறைவில்லை.

தம் வயலிலும் வாழ்விலும் விழல் மண்டாதபடி தினந்தோறும் களையெடுத்த வண்ணமாகவேயிருப்பார்கள். இதன் பலனே கிராமத்தில் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், தர்ம சிந்தை, பொறுமை, சாந்தம் முதலிய உயர் குணங்களும் குடிகொண்ட குடிகள் நிரம்பியிருத்தலாகும்.

இவ்வுலகில் உள்ள பொருள்கள் எல்லாம் அழியும் பொருள்களாதலால், உணவுப் பொருள்களையும் விற்றுக் காசாக்கிச் சேர்த்துப் பாங்கியில் போடும் புத்தியை நம் கிராமவாசிகளுக்கு ஈசன் கொடுக்கவில்லை. ஆகையால் அவர்கள் தமக்குக் கண்டு மிஞ்சும் காய்கறி, தானியங்கள் முதலியவற்றைச் சுற்றத்தாருக்கும், ஏழைகட்கும் கொடுத்து உதவுவார்கள். சாமாராதனை முதலிய தரும வழிகளிற் செலவிடுவார்கள். வயலில் உழைக்கும் பண்ணையாட்களுக்கும் அவரவர் தேவைக்கேற்ப வேண்டிய சமயங்களில் கொடுப்பார்கள். இவ்வாறு பல வகையிலும் அவை செலவிடப்படுவதன்றி விற்பதென்ற வழக்கமே கிடையாது. கிராமத்தார்கள் உணவுப் பொருள்களை விற்பதென்பது சமீபகாலத்தில் ஏற்பட்ட புது வழக்கமாகும். இப்பொழுது குழந்தைகள் அருந்துவதற்குரிய பாலையும் விற்றுக் காசாக்கிக்காபிக் கொட்டையும் மண்ணெண்ணையும் வாங்குகின்றோம்; என்ன கொடுமை; இத்தகைய கொடுமைகளின்றி மேற்கூறியபடி செவ்விய முறையில் நடந்து வந்ததனால்தான் நம்முடைய கிராமங்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாய்ச் செழிப்புற்று ஓங்கி எங்கும் அமைதி நிலவ மேழிச் செல்வத்தின் கெடாத மேன்மைக்குச் சாட்சியாக விளங்கிவந்தன.

இப்பொழுது நகர வாழ்க்கையில் முழுகியிருப்பவருக்கு, இதுவரை கூறியவையெல்லாம் ஏதோ புனைந்துரையாகத் தோன்றலாம். ஆயினும், காவேரிதீரத்தில், பேராலமரம் போல நெடுங்காலமாக விளங்கி வரும் சில இனும் கிராமங்களில் மேற்கூறிய மாசற்ற முறைகள் இன்றும் வழங்கி வருவதைக் காணலாம். எல்லாக் கிராமங்களிலும் மீண்டும் இம்முறைகள் வந்து, எளிய இனிய வாழ்க்கை நடைபெற்றால் தான் நம் நாட்டில் சுவர்க்க இன்பத்தினும் இனிய சுகமும் அமைதியும் உண்டாகும் நிலைபெறும்.

" உழவே தலை " என்னும் கொள்கையை நெடுங்காலமாகக் கையாண்டு நிற்கும் கிராம மக்களின் மனம், பிற ஆடம்பரத் தொழில் முயற்சிகளிற் செல்லுமாயின் கிராமங்களின் பெருமை நிலையாது. ஏனெனில், கிராமங்களின் அளவையும் அழகையும் வாழ்க்கையையும் வேறுபடுத்தாமல் இயற்கைக் குடிசைகளில் அவ்வாடம்பர யந்திரத் தொழில்களை ஒரு நாளும் நடத்த முடியாது. ஆதலால், இத்தகைய மாறுபட்ட ருசியே நம் கிராம வாழ்க்கையின் சிதைவுக்கு முக்கிய காரணமாகிறது. இரண்டாயிரமாண்டுகளுக்கு மேலாகப் பல படையெடுப்புகளும் சச்சரவுகளும் ஆட்சி முறைகளும் தாக்கிய போதிலும், தாங்கிப் பிழைத்து ஓங்கி வளர்ந்து வந்த நம் கிராமங்களின் சீர்கெடுதலுக்கு, ஆடம்பர வாழ்க்கையிலுள்ள மோகமே தூமகேதுவாகத் தோன்றியுளது. பல புயற்காற்றுக்கும் தப்பி ஓங்கி வளர்ந்து, நன்கு குலை குலையாய்க் காய்க்கும் ஒரு தென்னை மரத்திலே ரேர்க்கறையான் பற்றியதுபோலத் திருந்திய கிராம வாழ்க்கையிலே இந்த மனக் கறையான் பற்றியுள்ளது.

மேல்நாட்டு நாகரீகமாகிய புது வெள்ளம் நம் நாட்டிற் பரவி வருவதால், பல பல புதிய பழக்க வழக்கங்கள் தோன்ற, அவை நமது புராதன ஆசாரங்களாகிய பழைய வெள்ளத்தை அடித்துக் கொண்டு போய்விடுகின்றன. அவை, அவ்வப்போது உண்டாகும் அற்ப சந்தோஷமாகிய மயக்கத்தைத் தருவனவன்றி வேறில்லை. இவற்றால் இம்மையில் அமைதியான இனிய எளிய வாழ்வையோ அல்லது மறுமையில் நல்ல பயனையோ அடைய முடியாது.

ஆரம்பத்தில் சிறிது சௌகரியத்திற்காகவும் ஆடம்பரத்திற்காகவும் வாங்கும் பொருள்களும் கைக்கொள்ளும் பழக்கங்களும் நாளடைவில் இன்றியமையாதனவாகி விடுகின்றன. அவற்றிற்காக நம்

உணவையே விற்று அவற்றைப் பெறவேண்டியிருக்கிறது. அதனால் வருஷத்திற்கு வருஷம் நம்முடைய செல்வம் குறைய, கிராமங்களும் க்ஷீணிக்கின்றன. கிராமங்களில் பெரிய சீமான்களாக, நெல் களஞ்சியம் எந்நாளும் குறையாமல் இருக்கக் கூடியவர்களுக்கும் இப்பொழுது, ஆறு மாதத்துச் சாப்பாட்டுக்கு வேண்டிய நெல் கூடக் குதிரிலிருப்பது அரிதாகி விட்டது. அவ்வாறுயின் கூலி வேலை செய்வோர் நிலைமையைப் பற்றிக் கேட்கவும் வேண்மோ? இந்தக் கஷ்டத்தால் அவர்கள் தங்கள் மானியங்களையும் வீடுவாசல்களையும் தேடிச் சென்று சொல்ல முடியாத கஷ்டங்களுடன் பல ஈனத் தொழில்களையும் செய்து வயிறு வளர்க்க நேரிடுகிறது. அதிலும் மண்ணைப் போடப் பல கெட்ட பழக்கங்கள் அவர்களைப் பற்றிக் கொள்கின்றன. கிராமங்களில் அவர்கள் வயிற்றுக்குத் தாழாமல் சோறு கிடைத்தாலல்லவோ முணுமுணுக்காமல் வேலை செய்ய முடியும்; மேழிச் செல்வமும் வளரும்.

நம் நாட்டுக்கு வந்த கேடு இதனால் மட்டுமன்று. கிராமங்களில் தலைமையுள்ளவர்கள்—பரம்பரைப் பஞ்சாயத்தார்கள்—நாட்டாண்மைக்காரர்கள் கூட ஆங்கிலம் படித்துப் பட்டம் பெற்று, கலெக்டர்களாகவும், ஜட்ஜுகளாகவும் ஆகிவிடுவோம், என்னும் ஆசையுடனும், பொருளை மூட்டை மூட்டையாக வாரிக் கட்டலாமென்னும் நோக்கத்துடனும் தங்கள் கிராமம் பாழாக நகரங்களில் சென்று தங்கிக் குமாஸ்தாக்களாகவும் வக்கீல்களாகவும் அமர்ந்து வீணே உழைத்துக் கைப்பொருளையும் இழந்து கஷ்டமடைகிறார்கள். இதுவும் கிராமங்களுக்கு வந்த ஒரு பெரிய துரதிருஷ்டமல்லவா? இந்தப் பேராசையே சாத்துவிக விருத்தியிலிருந்து நம் மனத்தைத் திருப்பிப் பொய்க் காசு செய்யும் பொல்லாப் புத்தியை உண்டாக்கி, நோயற்ற உயர்ந்த கிராம வாழ்க்கையைத் தொலைத்து, நகரங்களின் சாக்கடையில் நம்மைத் தள்ளிவிட்டது. கிராமங்களில் மனவமைதியுடன் கையிற் சுவடியேந்தித் தியானம் செய்து வந்த நாம் நகரங்களின் சந்தையிரைச்சலிற் குடியிருந்து கொண்டு பெட்டியடியில் உட்கார்ந்து கையில் தராசு பிடிக்கத் தொடங்கிவிட்டோம். ஆகவே கிராமங்களின் செல்வமும் அமைதியும் சீர்குலைவது ஆச்சரியமா?

நமது பாரத நாட்டில், தேனடையிலுள்ள சிற்றறைகள் போல ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. அவற்றிலுள்ள முப்பது கோடி தேனீக்களும் பரிசுத்தமான, ஈசுவரனுக்குப் பிரியமான தும்பைப் பூவை விட்டுக் கேவலமான புளியம்பூவைச் சுற்றித் தேன் சேகரிக்க முயலுகின்றன. இந்த ஏழு லட்சம் கிராமங்களின் நிலைமையையும் நேர்படுத்துவதே இப்பொழுது இந்தியரின் முதற்கடமை. அதுவே நமது அழியாத பாக்கியம். ஆதலால் இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய கிளர்ச்சியின் முக்கியமான வேலை என்னவென்றுல் முதலில் சீர்குலைந்துள்ள இந்த லட்சக்கணக்கான கிராமங்களைத் திருத்தியமைப்பதாகும். அவ்வாறு செய்வதில், மேல்நாட்டு நாகரிகத்தின் நல்ல அம்சங்களையும், சுகாதார முறைகளையும் கைக்கொண்டு பழைய முறைகளோடு கலந்து மேன்மைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யின் நம் நாட்டில் மட்டுமன்று, உலக முழுவதுமே கிராம வாழ்வின் சிறப்பை நாம் பரவச் செய்தவர்களாவோம்; அது நமது கடமையாகும்.

இனி, கிராம வாசத்தின் மேன்மைக்கும் காரணமும், அதன் உட்பொருளும், அதனால் உலகத்தார் அறிந்து கொள்ள வேண்டியதும் என்னவென்றும் பார்ப்போம்.

உலகில் மேம்பட்டுவரும் ஜனசமூகங்களின் மேடு பள்ளங்களுடன் கூடிய இல்லற வழியைக் கிராம வாழ்க்கையானது ஒரு நிரவின சமவழியாக்குகிறது. கிராம வாழ்க்கையில்தான் கடவுளுக்கு உகந்ததொரு சிறந்த கொள்கை இருக்கிறது. அதாவது உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேறுபாடின்றி எல்லோருக்கும் அவரவர் தேவைக்கேற்ப உணவுப் பொருள்கள் தட்டாது கிடைக்க வேண்டும் என்பது.

அதுதான் நம் பாரத நாட்டின் சிறந்த கொள்கை அது கிராமங்களில்தான் உள்ளது. சாமர்த்தியத்துக்குத் தக்கபடி சம்பாத்தியமென்ற மேல்நாட்டுக் கொள்கைக்கு நமது புண்ணிய பூமியில் இடமில்லை. பசி என்பது எவருக்கும் சமந்தானே? மிகச் சுறுசுறுப்புள்ள தொழிலாளியாக இருந்தாலென்ன, பண்ணை வேலை செய்யும் பேதையாக இருந்தாலென்ன,

> "சேவித்தும் சென்றிரந்தும் தெண்ணீர்க் கடல் கடந்தும்
> பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
> பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையால்
> நாழி யரிசிக்கே நாம்" (நல்வழி)

என்றபடி சாண் வயிறு எல்லோருக்கும் ஒன்று தானே.

நம் நாட்டில் நற்புத்திக்கும், நன்னடத்தைக்கும், விடாமுயற்சிக்கும், தெய்வ பக்திக்கும், பிற நற்குணங்களுக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய் சம்பளமும் வருஷாந்தர உயர்வும் பரிசாக அளிப்பது வழக்கமில்லை. அத்தகைய மேன்மைக் குணமுடையோருக்குப் பிறர் செய்யும் வணக்கமும் காட்டும் மரியாதையுமே பரிசு. எவருக்கும் இன்பம் அளிக்கத்தக்க இவ்வுயர்ந்த சட்டமல்லவோ உலகமெங்கும் பரவ வேண்டும். நமது புராதன கிராம வாழ்க்கையின் உயர்ந்த லட்சியம் இதுதான்.

உழைவைத் தவிர வேறு சிறந்தனவாயுள்ள கைத்தொழில்களுள் ஒன்றையும் தெரிந்து கொள்ளாமையால்தான் அவர்கள் குக்கிராமங்களில் கிடந்து கஷ்டப்பட்ட போதிலும், புன்மையான அந்த வாழ்வையே உயர்வானது என்று புகழ்ந்து கூறுகிறார்கள் என்று சிலர் நன்மை கூறுவதுண்டு. உண்மை அப்படி யன்று. ஒவ்வொரு மனிதனுடைய தனி வாழ்க்கையிலும் சாத்துவிக ராஜஸ தாமஸமாகிய முக்குணங்களும் கலந்து அலைபோல் புரண்டு காணப்படுகின்றன.

நகர வாழ்க்கையில் தாமஸ குணமே மிகுந்து காணப்படுமாதலாலும், சாத்துவிக குணத்திற்குக் கிராம வாழ்க்கையே உரிய சாதனமாதலாலும் அவ்வியற்கைகளை அறிந்து முக்காலமும் அறிந்த நம் முனிவர்கள் அம் முக்குணங்களிற் சிறந்த சாத்துவிகம் ஓங்கவும், அதமமாகிய தாமஸம் குறையவும் ஏற்ற வகையில் கிராம வாழ்க்கையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

எப்பொழுதும் கர்மாவையே செய்யும்படி தூண்டும் மாமிச பிண்டமாகிய இச்சரீரத்துக்கும், கர்மாவை விட்டு விலகி ஏகாந்தமாய் ஈசனுடன் கலந்து நிற்க விரும்பும் ஆத்மாவுக்கும் அபிவிருத்திக்குரிய சாதனங்கள் கிராம வாழ்க்கையிலேதான் கிடைக்கும். அலைகடலில் அகப்பட்டு புயலால் மோதுண்டு தத்தளிக்கும் மரக்கலத்துக்கு அதனை நங்கூரம் பாய்ச்சி அசையாமல் நிறுத்துதற்கு ஏற்ற அலையற்ற துறைமுகமாக உயிருக்கு உடலாவது போல் இந்த ஜன சமுதாயத்துக்குக் கிராம வாழ்க்கையே மிகச்சிறந்த ஆதாரமாகும்.

---

## "பேருதவிக்கு நன்றி"

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

சேவை அதிபதி டாக்டர் டபிள்யு. ஏ. கருணாரத்ன திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளார்.

சுகாதார இலாகா எடுத்த அளவையின்படி, நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் தினசரி சுமார் 34,000 நேயாளார் சிகிச்சை பெறுகின்றனர். ஆயினும், 29,000 படுக்கைகளே இந்நோயாளரின் உபயோகத்துக்கு உள்ளன. எனவே சுமார் 5,000 நோயாளருக்குப் படுக்கை வசதி இருப்பதில்லை. விரைவில் 2,000 படுக்கைகளுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதனால், ஆஸ்பத்திரிகளில் தற்போது உள்ள நெருக்கடி ஓரளவு தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமது திட்டத்தைக் கூடிய விரைவில் செயற்படுத்துமாறு சுகாதார அதிபர் தமது அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் நோயாளருக்கு இருக்கும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

---

## தேடாத் திரவியமே .............

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

யாரோ ஓடுவதையும், நாயின் சத்தத்தையும் கவனித்த பொன்னன் கேட்கிறான் :

" திடு திடுத்து மழைபெய்ய
திட்டியெல்லாம் வாந்தோட
மதுரையடி நாய் குலைக்க—இங்கே
வந்த கள்ளன் யார் மதினி "

பொன்னனின் குரல் அழகனின் காதுகளில் முட்டி மோதியதும் மூச்சைப் பிடித்துக்கொண்டு பின்னால் வந்துவிடுவானோ என்ற திகிலினால் ஓடி வந்தான்.

நான் நின்ற மரத்தடிக்கே வந்துவிட்டான். நல்ல காலம் என்னில் மோதிக்கொள்ளவில்லை. நான் ஒன்றும் தெரியாதவன் போல் ஏன் இப்படி இளைக்க இளைக்க ஓடிவருகிறீர் என்று வினவினேன். அதற்கு அவன் :

" மாமியிற்ற போனேன்
மாங்குயிலைப் பார்ப்போமென்று
கடிநாயும் சங்கிலியும்
கடவலிலே கட்டிருக்கு "

என்று சொன்னான். எங்களின் பேச்சொலியைக் கேட்டு முன்பு குலைத்த நாய்கள் வந்து கொண்டிருந்தன. பொன்னன் உண்மையிலே கள்ளர்கள் என்று நினைத்துவிட்டால்! என்னையும் பிழையாக நினைத்துக்கொள்ள மாட்டானா? அழகனைப் பின் தொடர்ந்து நானும் ஓடினேன்; கீழ்மூச்சு, மேல் மூச்சு வாங்க.

# இரண்டாவது சிமெந்துத் தொழிற்சாலை

புத்தளத்தில் இரண்டாவது சிமெந்துத் தொழிற்சாலை நிறுவும் வேலை ஆரம்பமாகிவிட்டது. இத் தொழிற்சாலை நிறுவனத்திற்கான விரிவான மதிப்பீடுகளை அரசாங்கம் வெளிநாட்டு நிபுணர்களுடன் கலந்தாலோசித்துத் தயாரித்துள்ளது. வருடத்திற்கு 1,25,000 தொன் சிமெந்தை உற்பத்தி செய்யவல்ல இத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு 3 கோடி 80 லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

உள்நாட்டிலே தற்போது காங்கேசன்துறையிலுள்ள தொழிற்சாலையில் மாத்திரமே வருடத்திற்கு 80,000 தொன் சிமெந்து உற்பத்தி செய்யப்படுகிறது.

சீமந்து உற்பத்தியை அதிகரித்தலும், அதன் விலையைக் குறைத்தலும் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையின் அபிவிருத்தித் திட்டத்திலுள்ள நோக்கங்களாகும்.

சிமெந்தின் தற்போதைய விலையைப் பரிசீலனை செய்தபோது, போக்குவரத்தினாலேயே சிமெந்தின் விலை பெரிதும் அதிகரிக்கப்படவேண்டியிருக்கிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. தற்போதைய உற்பத்தியில் அரைவாசி வரையில் தொழிற்சாலையை அடுத்த பகுதியிலேயே வாங்கப்பட்டுவிடுகின்றன. மிகுதி நாட்டின் தென் பகுதிக்கு மேற்குறித்த செலவில் ரயில் மூலம் அனுப்பப்படுகின்றன. அதிகரிக்கப்படும் சிமெந்து உற்பத்தி நாட்டின் தென்பகுதியிலேயே விற்பனையாகும் என எதிர்பார்க்கப்படுவதனால் சிமெந்து கொண்டுசெல்லப்படுவதற்கு மாற்றுவழிகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன. இதன்படி, சிமெந்துக் கட்டிகள் கப்பல் மூலம் காலிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு அரைக்கப்பட்டு, அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படும். காங்கேசன்துறை, காலி துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்ற அடிப்படையிலேயே உத்தேச திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. சிமெந்தை அனுப்புவதில் மாத்திரம் அல்லாது, தொழிற்சாலைக்கு வந்து சேரும் எரிபொருள், ஜிப்சும், களிமண் போன்றவற்றினால் ஏற்படும் செலவும் சிக்கனப்படுத்தப்படும் என்ற காரணத்தினால் காங்கேசன்துறையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென சிமெந்துக் கூட்டுத்தாபனம் வற்புறுத்தியது.

சிமெந்து முக்கியமாக உபயோகிக்கப்படும் பிராந்தியத்திலிருந்து காங்கேசன்துறை வெகு தூரத்திலுள்ளது. இதனால் ரயில்மூலம் சிமெந்து அனுப்புதல் அபரிமிதமான செலவில் முடிகிறது. இக்காரணங்களினால், காங்கேசன்துறையிலுள்ள உன்னத மூலப் பொருள்வளம், வேலைத்தலம் முதலியன தற்போதைக்கு விஸ்தரிக்கப்பட முடியாமலிருக்கின்றன. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை உத்தேச 2 லட்சம் தொன் அல்லது அதற்கு மேலாக உற்பத்தியை அதிகரிப்பதானால், லாபகரமான போக்குவரத்து வசதிகளுக்கு வகைசெய்தல் வேண்டும். இலங்கை தனக்குத் தேவையான சிமெந்தை உற்பத்திசெய்யும் வரை, காலியில் நிறுவப்பட்டிருக்கும் உபதொழிற்சாலை இறக்குமதி செய்யப்படும் சிமெந்துக் கட்டிகளை அரைத்து, அடைப்பதிலும் ஈடுபடும். இதனால் சிமெந்தின் விலை கணிசமாகக் குறையலாம்.

## பௌத்தம்

(18 ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொண்டு பிரபஞ்ச மூலம் பற்றிய அதன் கருத்துக்களையும் எளிதாக அறிந்து கொள்ளலாம்.

முதலில் அறிவைத் தரும் வாயில்கள் பற்றி பௌத்தர் கொள்கையையும் இந்துக்கள் கொள்கையையும் ஒப்பிடுவோம். அதனை யொப்பிட ஏனைய தாமாகவே விளங்கும். இந்து தரிசனங்கள் பெரும்பான்மையும் பிரத்தியட்சம் அனுமானம் ஆப்த வாக்கியம் (காண்டல், கருதல், உரை) ஆகிய மூன்றையுமே தமக்குப் பிரமாணமாகக் கொள்வன. ஆனால் பௌத்தம் இவற்றுள் காண்டல் கருதல் இரண்டை மட்டுமே ஏற்று மூன்றாவதாகிய உரை அதாவது வேத வாக்கை ஏற்காது தள்ளி விடுகின்றது. இதன் விளைவாக ஏற்படும் வேற்றுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. பௌத்தம் ஏற்க மறுத்த மூன்றாவது பிரமாணத்தைத் தான் இந்து தரிசனங்கள் தாம் ஏற்கும் மூன்று பிரமாணங்களுள்ளும் முதன்மையானதாகக் கருதுகின்றன. பிரமாணங்களுள் ளெல்லாம் தேவ வாக்கே தலை சிறந்ததென அவை கொண்டு அதனைப் பின்பற்றுங் காரணத்தால் தான் அவை வைதீக சமயங்கள் என வழங்குகின்றன். வேதத்தை எதிர்த்து எழுந்த காரணத்தால் தான் பௌத்தம் அவைதீக சமயம் எனப்படுகின்றது.

(வானொலிப் பேச்சு)



ஆபிரிக்க-ஆசிய சட்ட அறிஞர்கள் கமிட்டியின் மூன்ருவது மகாநாடு ஜனவரி 20 ம் திகதி கொழும்பு கால்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றபோது, நீதி மந்திரி திரு. வலன்ரின் ஜயவிக்கிரம சொற்பொழிவாற்றுகிருர்.

# சட்ட அறிஞர் மகாநாடு

ஆபிரிக்க-ஆசிய சட்ட அறிஞர்கள் கமிட்டியின் மூன்றுவது மகாநாட்டினை 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ந் திகதியன்று மந்திரிமார், நீதியரசர், வெளிநாட்டுத் தூதர் முதலிய பிரமுகர்கள் முன்னிலையில் நீதியமைச்சர் திரு. வலன்டைன் ஜய விக்கிரமா அவர்கள் ஆரம்பித்துவைத்தார்கள். இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இந்தோனீஷியா, ஜப்பான், ஐக்கிய அரபுக் குடியரசு, ஈராக், இலங்கை ஆகிய எட்டு நாடுகளின் பிரதிநிதிகள் இம்மகா நாட்டிற் கலந்துகொண்டார்கள்.

நீதியமைச்சர் இம்மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், ஐ. நா. வில் ஆசிய—ஆபிரிக்க நாடுகள் சம்பந்தமான பிரச்னைகள் ஆராயப்படும் பொழுது, அவற்றைச் சுமுகமாகத் தீர்த்துவைப்பதில் இந்நாடுகள் ஒருங்குசேர்ந்து கூறும் அபிப்பிராயம் பெரிதும் பயன்படும் என்றும் சட்ட முறையை உருவாக்குவதில் ஆசிய—ஆபிரிக்க சட்ட அறிஞர் கமிட்டி பெரிதும் உதவியாயிருக்கும் என்றும் குறிப்பிட்டார். மேலும் அவர் பேசுகையில் இலங்கையின் வட பாகத்தில் தேசவழமைச் சட்டம் உண்டென்றும், கண்டி மக்களுக்கு வேறு ஒரு சட்டம் உண்டென்றும், பிற இடங்களில் உரோமன் டச்சுச் சட்டம் நடைமுறையில் உண்டென்றும் குறிப்பிட்டார். இலங்கைப் பிரதம நீதியரசரும் மகாநாட்டுத் தலைவருமான திரு. எச். எச். பஸ்நாயக்கா பேசுகையில் " கடந்த மூன்று வருட காலத்தில் சர்வதேச சட்டப் பிரச்சினைகளில் ஆசிய—ஆபிரிக்கா நாடுகளின் கொள்கை என்ன என்பதை எடுத்துக்காட்டவும் அங்கத்துவ நாடுகளில் பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்க்கவும் இந்தச் சட்ட அறிஞர் ஆலோசனைக் கமிட்டி பெரிதும் உதவியுள்ளது. மேலும் அநேக காரியங்கள் சாதிக்கப்படலாயின. இங்கு சமுகமளித்துள்ள பிரதிநிதிகளுக்கு நல்வரவு கூறுகிறேன். இந்நாட்டின் எழில் மிகு பகுதிகள் சிலவற்றைப் பார்வையிட ஒழுங்கு செய்திருக்கிறோம். இந்தச் சட்ட அறிஞர் கமிட்டிக் கூட்டம் மாறிமாறி அங்கத்தினர் நாடுகளில் நடத்தப்படுவதால் பரஸ்பர நல்லெண்ணம் பெருக இடமுண்டு. " என்று குறிப்பிட்டார்.

---

கவிதை

## கார்த்திகைத் தீபம்

" சோதி "

கார்த்திகைத் தீபமடி—சகியே
கண்கொள்ளாக் காட்சியடி
மாட்சி தெரியுதடி—முன்னோர்
வகுத்த கொள்கையடி ! 1

வீடு நிறைந்ததடி—தெரு
வீதி நிறைந்ததடி—பகல்
போலென் றிருந்ததடி—ஒளி
பற்றிய காட்சியடி ! 2

பால்போன்ற தீபமடி—நல்ல
பகல்போன்ற தோற்றமடி
வேல்போன்ற கூர்மையடி—சுடரின்
வித்தை தெரியுதடி ! 3

குழந்தைகள் வைத்ததடி—பல
கோடிபேர் வைத்ததடி—யாவும்
நலந்தர வைத்ததடி—எங்கும்
நல்லவர் வைத்ததடி ! 4

சோதி வடிவமடி—காணும்
சுடரின் வண்ணமடி
பாதி வடிவினாய்—எண்ணும்
பராபரன் தோற்றமடி ! 5

ஆணவ மானஇருள்—தூர
அகன்று நின்றவிடம்
பூரண மாகுமடி—சகியே
போற்றிக்கொள் வாயிதனை. 6

தீபம் நிறைந்துவிட்டால்—சகியே
தீமை யழிந்ததடி
யாவும் நிறைந்தவிடம்—ஒரு
யௌவன மாகுமடி ! 7

# யானைக்கும் கலங்கார்

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள்

சில ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் திருமுறை மகாநாடு நடந்தது. நான் போயிருந்தேன். இலங்கையில் வடக்கே உள்ள மாகாணம் யாழ்ப்பாணம். அங்கே தமிழர்கள் வாழ்கிருர்கள். இலங்கையின் கிழக்கு மாகாணத்துக்கு மட்டக்களப்பு என்று பெயர். அங்கும் தமிழர் இருக்கிருர்கள். இந்த இரண்டு மாகாணங்களும் தமிழர் வாழும் இடங்கள். இரண்டிடங்களிலும் தமிழார்வம்கொண்ட மக்கள் மிகுதியாக இருக்கிருர்கள்.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த திருமுறை மகாநாட்டுக்கு மட்டக்களப்பிலிருந்தும் பல அன்பர்கள் வந்திருந்தார்கள். அவர்களிற் சிலர் என்னைக் கண்டு “நீங்கள் இந்த மகாநாடு முடிந்தவுடன் மட்டக்களப்புக்கு வந்து பேசவேண்டும்” என்று சொன்ஞர்கள். நான் ஒப்புக்கொண்டேன்.

ஒருநாள்—அன்று அமாவாசை—காலை 12 மணியளவில் புறப்படுவதாகத் தீர்மானித்தோம். நீர்வேலி என்னும் இடத்தில் உள்ள குருக்கள் வீட்டிலிருந்து ஒரு காரில் புறப்பட்டோம். பலாலி ஆசிரிய கலாசாலைத் தமிழாசிரியரும் சிறந்த பக்தருமாகிய திரு. பொ. கிருஷ்ணபிள்ளை என்பவரும், இந்தியாவிலிருந்து நான் அழைத்துச் சென்றிருந்த நண்பர் ஒருவரும், மட்டக்களப்பு நண்பர் இருவருமாக ஐவர் அந்தக்காரில் ஏறிஞேம். டிரைவரையும் சேர்த்து அறுவர். புறப்படும்போது நான், “நாம் ஆறுமுகமாகப் புறப்படுகிறேம்” என்று கூறி முருகனை நினைவூட்டினேன்.

யாவரும் வண்டியில் ஏறிப் புறப்பட்டோம். யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் 250 மைலுக்கு மேல் இருக்குமென்று நினைக்கிறேன். யாழ்ப்பாணப் பகுதியைத் தாண்டிக் கார் போய்க்கொண்டிருந்தது. நான் தமிழ்ப் பாடல்களில் உள்ள நயத்தைச் சொல்லிக்கொண்டே வந்தேன். பண்டித கிருஷ்ண பிள்ளையும் சிலவற்றைச் சொன்ஞர். பொழுது போவது தெரிமாயல் இருந்தது.

பொலன்னறுவா என்ற இடம் வந்தது. அப்போது மாலை ஏழுமணி இருக்கும். அதற்கப்பால் நீண்ட காடு; கிட்டத்தட்ட எண்பது மைலுக்குமேல் காட்டுப்பகுதியில் செல்ல வேண்டும். அருமையான ரோடு கோணல் மாணலின்றி நேர்கோடு கிழித்தது போல் இருக்கும். ஆனல் இருமருங்கும் சுவர் வைத்தாற்போல ஓங்கி வளர்ந்த மரங்களை யுடைய காடுகள்.

பொலன்னறுவாவில் காரோட்டி ஒரு யோசனை சொன்ஞர். “இங்கேயே இரவு தங்கி விடியற் காலையில் எழுந்து மட்டக்களப்புக்குப் போய்விடலாம்” என்றுர். மட்டக்களப்பு அன்பர்கள் அதற்கு இசையவில்லை. “நம்முடைய வரவை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக்கொண்டு அன்பர்கள் காத்திருப்பார்கள் இன்றே வந்து சேருவதாகத் தந்தி வேறு கொடுத்துவிட்டோம். என்ன ஆனுலும் ஒரேயடியாக மட்டக்களப்புக்குப் போய்விட்டால் நம் மனம்போல இளைப்பாறிக் கொள்ளலாம்” என்றுர்கள். ஆகவே பயணம் தொடர்ந்தது.

நான் ஏதேதோ சொல்லிக் கொண்டு வந்தேன். கார் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. நான் அருணகிரியார் வாக்கின் நயத்தை எடுத்துச் சொன்னேன். யாவரும் அமைதியாகக் கேட்டு வந்தார்கள். கார் அந்தகாரத்தைக் கிழித்துக்கொண்டு சென்றது. சாலையோ காட்டைக் கிழித்துக்கொண்டு சென்றது.

பிறகு கந்தர் அலங்காரப் பாடல்களைச் சொல்லத் தொடங்கினேன். மெல்லமெல்லப் பொருள் சொல்வதையோ நயம் சொல்வதையோ விட்டு விட்டுப் பாட்டை மட்டும் சொல்வதை தொடங்கினேன். உணர்ச்சி உந்த வேறு எந்த நினைவும் இல்லாமல் முருகன் நினைவோடு இசையுடன் பாடலைச் சொல்லிக் கொண்டே யிருந்தேன். காருக்குள் யாரும் ஒரே நினைவாக இருந்திருக்க வேண்டும். யாரும் பேசவில்லை.

காரின் வேகம் மிகுதிப்பட்டது, பின்னும் அதிகமாயிற்று. வாயு வேகமாகப் பறக்கத் தொடங்கியது. இலங்கைச் சாலையில் எவ்வளவு வேகமாகவும் காரை ஓட்டலாம், அதற்காகவே அமைந்த சாலை அது. நான் உயர்ந்த குரலில் பாடிக்கொண்டே இருந்தேன். முன்பக்கத்தில் இருந்த டிரைவரும் அன்பரும் ஏதோ மெல்லப் பேசிக்கொண்டார்கள். காரின் வேகம் பின்னும் மிகுதியாயிற்று. பாட்டுப் பாடும் உணர்ச்சி வேகத்தில் அந்த வேகத்தைக் கவனிக்கும் நிலை என்னிடத்தில் இல்லை.

கடைசியில் மட்டக்களப்பை வந்து அடைந்தோம். அங்கே நான் தங்க நல்ல வசதியான இடம் ஒன்றைத் திட்டம் செய்திருந்தார்கள். அங்கே பண்டங்களை இறக்கி வைத்தார்கள். நான் கைகால் கழுவிக் கொண்டு திருநீறு எடுத்துப் பூசிக்கொண்டேன். அப்போது காரோட்டி விரைவாக வந்து நெடுஞ்

சாண் கிடையாக என் காலில் விழுந்து, எழுந்து, "திருநீறு தாருங்கள்" என்று கை நீட்டினர்.

"நான் குரு அல்லவே! சுவாமிகளும் அல்லவே! திருநீறு தரும் தகுதி என்னிடம் இல்லையே!" என்றேன்.

"இல்லை, இல்லை; தாருங்கள், பிறகு சொல்கிறேன்".

நான் திருநீறு கொடுக்க அவர் வாங்கி அணிந்து கொண்டார்" பிறகு, "நீங்கள் தெய்வம்; உங்களால் நாங்கள் பிழைத்தோம்" என்றார்.

எனக்கு அவர் பேச்சு வியப்பாக இருந்தது. "நீங்கள் சொல்வது விளங்கவில்லையே!" என்றேன்.

"இன்று நாம் காரில் வரும்போது நான் ஓட்டிய வேகம் இதுவரையில் நான் ஓட்டாதது. இரண்டிடங்களில் ஆபத்துக் காத்திருந்தது".

"ஆபத்தா? அது என்ன?" என்று ஆவலோடு கேட்டேன்.

"இந்தக் காடுகளில் யானைகள் அதிகம். கார் போகும் போது அவை வந்தால் காலால் நெட்டித் தள்ளிவிடும். அதனால் யாரும் பெரும்பாலும் இரவு நேரங்களில் இந்தச் சாலையில் போவதில்லை. அவசியம் நேர்ந்தால் போவார்கள். இடையிலே யானை சாலையைக் கடக்கும் குறிப்புத் தெரிந்தால் நெடுந் தூரத்தில் காரின் விளக்கை அவித்து விட்டு நிற்பார்கள். யானைகள் போன பிறகே மெல்ல மீட்டும் பயணத்தைத் தொடங்குவார்கள்."

"யானை அருகில் இருந்தாலோ?"

"அவர்களுடைய விதியின்படி ஆகும்."

"அது கிடக்கட்டும்; நம்முடைய கதையைச் சொல்லுங்கள்" என்றேன்.

"இப்படி நேருமென்று அஞ்சியே பொலன்னறுவாவில் தங்கி வரலாமென்று சொன்னேன். இரண்டு இடங்களில் யானை வந்தது".

"அப்புறம்? எனக்கும் ஒன்றும் தெரியாதே!"

"நீங்கள் முருகனுடைய புகழை உரக்கச் சொல்லிக்கொண்டே யிருந்தீர்கள். முதலில் யானை மரத்தை ஒடிக்கும் ஒலி அருகில் கேட்டது. அப்போது எனக்கு அச்சம் உண்டாயிற்று. நீங்கள் பாடும் பாட்டு என் காதில் விழுந்துகொண்டே இருந்தது. அதனால், ஆண்டவன் காப்பாற்றுவான் என்ற தைரியத்தோடு மிக வேகமாகக் காரை ஓட்டலானேன். ஆனால் சிறிது தூரம் வந்ததும் இன்னும் பெரிய ஆபத்துக் காத்திருந்தது. ஆணும் பெண்ணுமாக இரண்டு யானைகள் சேர்ந்து காட்டில் சாலையோரத்தில் மறைவில் நின்றன. யானையின் மத வாசனையினால் அதை அறிந்தேன். இது எங்களுக்குப் பழக்கம். இது நினைத்தாலே நடுங்கத் தக்க நிலை" அப்போது என் உடல் நடுங்கியது; கை நடுங்கியது, உள்ளமும் நடுங்கியது. ஆனால் நீங்கள் உற்சாகமாக முருகனை வேண்டிக்கொண்டிருந்தீர்கள் மறுபடியும் அந்தப்பாட்டு என் காதின் வழியே உள்ளத்தில் புகுந்து உறுதியை உண்டாக்கியது. மிக மிக விரைவாக என்றும் இல்லாதவேகத்தில், காரை ஓட்டினேன். கால்மணி நேரத்தில் ஆபத்தான பகுதியைக் கடந்து வந்து விட்டோம். அப்போது காரை ஓர் இடத்தில் நிறுத்தி எதிரே வந்த கார்க்காரரைக் கூட எச்சரித்தேன்.

"ஆம், ஏதோ எலியா என்று சொன்னதாக நினைவுக்கு வருகிறது".

"எலியா என்றால் சிங்களத்தில் யானைக்குப் பெயர். வழியில் யானை இருக்கிறது, ஜாக்கிரதை என்று சொன்னேன்".

"இந்தச் செய்திகளை அப்போது நான் தெரிந்து கொள்ளவில்லையே!" என்று கேட்டேன்.

"தெரிந்துகொள்ளாமல் இருந்தது நல்லதாகப் போயிற்று. எதையும் கவனியாமல் ஒரே பக்திப் பரவசமாக நீங்கள் பாடினதால் தான் நான் தளர்வு இல்லாமல் காரை ஓட்ட முடிந்தது. நாம் அபாயத்திற் சிக்காமல் தப்பினோம்."

அதைக் கேட்டதும் முருகனை நினைந்து வாழ்த்தினேன். அருணகிரிப் பெருமானின் அருளை வியந்தேன். "உங்களால் எனக்கு அருணகிரியார் வாக்குத் தெளிவாகப் பொருள் விளங்கியது. நான் கந்தர் அலங்காரப் பாடல்களைப் பாடிக்கொண்டு வந்தேன். அதன் பயனை அருணகிரியார் ஒரு பாட்டில் சொல்லியிருக்கிறார்:

சலங்காணும் வேந்தர் தமக்கும்அஞ்
சார்; யமன் சண்டைக்கஞ்சார்;
துலங்கா நரகக் குழிஅணு
கார்; துட்ட நோய் அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும் கந்தன் நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி
தான்கற்று அறிந்தவரே.

என்பது அந்தப் பாட்டு. அதில், "கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்" என்று சொல்லியிருக்கிறார். யானைக்கும் அஞ்சார் என்பதற்குப் பொருள் இன்று அநுபவத்தில் தெரிந்தது. அதை நீங்கள் உணர்த்தினீர்கள். எல்லாம் ஆண்டவன் திருவருள்" என்று சொல்லி, மனத்தால் முருகனை வணங்கினேன். (குமாரகுருபரன்)

# அரசாங்க பிரசுர நிலையத்தில் பெறக்கூடிய நூல்கள்

| | விலை ரூ. ச. | தபாற் செலவு ரூ. ச. |
|---|---|---|
| 1956 ம் ஆண்டின் 21 ம் இலக்க வெடிமருந்துச் சட்டம் .. | 0 45 | 1 10 |
| 1956 ம் ஆண்டின் 51 ம் இலக்க, முஸ்லீம் பள்ளிவாசல்கள், தரும நம்பிக்கைச் சொத்துக்கள் அல்லது வக்புகள் சட்டம் .. | 0 85 | 0 20 |
| 1936 ம் ஆண்டின் 16 ம் இலக்கம், ஒத்துழைப்புச் சங்கங்களின் அமைப்பு முறையும் அதிகரிப்பையும் பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திரட்டித் திருத்துவதற்கான சட்டம் .. .. | 0 25 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 43 ம் இலக்கச் சட்டம் ஸ்தல அரசாங்க சேவையை அமைப்பது ஒழுங்குபடுத்துவது முதலிய ஏற்பாடு செய்வதற்கான ஒரு சட்டம் .. .. .. | 0 40 | 0 20 |
| இராமச் சமுதாயச் சட்டத்தின் (அத்தியாயம் 148)—மறுபதிப்பு .. | 1 30 | 0 25 |
| 1947 ம் ஆண்டின் 17 ம் இலக்கம், இராம சமுதாயச் சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| 1953 ம் ஆண்டின் 1 ம் இலக்க நெற்காணிச் சட்டம் .. | 0 35 | 0 15 |
| 1939 ம் ஆண்டின் 31 ம் இலக்கச் சட்டம் கல்வி அபிவிருத்திக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவும் அதைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித் திரட்டுவதற்கான சட்டம் .. .. | 0 45 | 0 20 |
| 1946 ம் ஆண்டின் 32 ம் இலக்கச் சட்டம்—நீர்ப்பாசனத்தைப்பற்றிய நியாயப் பிரமாணத்தைத் திருத்தித்திரட்டுவதற்கான சட்டம் .. | 1 10 | 0 20 |
| 1951 ம் ஆண்டின் 13 ம் இலக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம் .. | 1 50 | 0 20 |
| 1954 ம் ஆண்டின் 31 ம் இலக்க முஸ்லீம் விவாக விவாகரத்து (திருத்த)ச் சட்டம் .. .. .. | 0 10 | 0 10 |
| அத்தியாயம் 104 தத்துவப் பத்திரங்கள் .. .. | 0 20 | 0 10 |
| அத்தியாயம் 120—வியாபாரப் பெயர்கள் .. .. | 0 40 | 0 10 |
| 1951 ம் ஆண்டின் 17 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவுச் சட்டம் .. | 1 35 | 0 20 |
| 1953 ம் ஆண்டின் 15 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 15 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 30 ம் இலக்க பிறப்பு இறப்புப் பதிவு (திருத்த)ச் சட்டம் .. | 0 10 | 0 10 |
| 1954 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—தாங்கள் செய்துவரும் வேலைக் கிரமத்திற் சேதமடையும் வேலையாட்களுக்கு நஷ்ட பூர்த்திப் பணம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கான சட்டம் .. | 0 35 | 0 20 |
| 1935 ம் ஆண்டில் ஏற்படுத்திய வேலையாட்கள் நஷ்ட பூர்த்தி விஷய ஒழுக்க விதிகள் .. .. .. | 0 35 | 0 20 |
| அத்தியாயம் 91—நொத்தாரிஸ்மார் (1938 ல் திருத்தியமைக்கப்பட்டது) .. | 1 30 | 0 35 |
| 1935 ம் ஆண்டின் 19 ம் இலக்கச் சட்டம்—இலங்கையிலே முடிக்குரிய காணியின் கிரமமான பண்படுத்தலுக்காகவும் பராதீனப்படுத்துதலுக்காகவும் ஏற்பாடுசெய்வதற்கான சட்டம் .. .. | 0 55 | 0 35 |
| 1946 ம் ஆண்டின் 3 ம் இலக்கச் சட்டம்—ஊர்ச்சங்கங்கள் .. | 2 90 | 0 35 |
| 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சட்டம்—வேலையாட்கள் சம்பளச் சங்கச் சட்டம் .. .. .. .. | 0 50 | 0 20 |
| அத்தியாயம் 95, கலியாணப் பதிவுத் சட்டம் .. .. | 0 55 | 0 20 |
| 1945 ம் ஆண்டின் 20 ம் இலக்க கலியாணப் பதிவுச் திருத்தச் சட்டம் | 0 50 | 0 10 |

அரசாங்க பிரசுர நிலைய அதிபர், தபாற் பெட்டி இலக்கம் 500, கொழும்பு என்ற விலாசத்தில் நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகவற் பகுதியினருக்காக, இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.